பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00




தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 10 | திங்கட்கிழமை | (24.01.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 116

## குச்சவெளியில் நிலவெடிப்பு



(திருகோணமலை)


திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்தில் நேற்று அதிகாலை நிலவெடிப்பு ஏற்பட்டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குச்சவெளி, கலப்பையாறு சுனாமி வீடமைப்பு திட்டத்துக்கு பின்னால் அமைந்துள்ள களப்பு பகுதிலேயே இச்சம்பவம் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது.

அப்பகுதியில் பொலிஸார் (11 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் குற்றச்சாட்டுக்கள் 900 பக்கங்களில் அறிக்கை

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்



(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கை ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்விலேயே இது சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட இந்த அறிக்கை 900 பக்கங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிலைச் சின்னத்திலேயே நாம் போட்டியிட விரும்புகிறோம்

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் அரசியலுரிமை சுதந்திரம், அபிவிருத்தி மற்றும் வாழ்வியல் உரிமைகள் அனைத்தையும் அடைவதற்கு சாத்தியமான ஒரேயொரு வழிமுறையான இணக்க அரசியலுக்கான கதவுகளை மூடிவிட விரும்பாத நாம் நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகளும் இணைந்து கொள்ளும் பொதுச் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதே ஆரோக்கியமானதாகும் என்று கருதுகிறோம்.**

இவ்வாறு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்திருக்கும் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உரிமை என்பது வெறுமனே பொழுது போக்கிற்காக பேசிக் கொண்டிருப்பதற்கான விளையாட்டுப் பொருள் அல்ல. எமது மக்களின் அவலங்களை வைத்து சுயலாப அரசியல் நடத்தும் வேலையும் அல்ல. அது அடைந்தே தீர வேண்டிய எமது மக்களின் (11 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் வெளிவரவிருக்கிறது சுவிஸ் வங்கிக் கணக்கு விபரம்

### அரசியல்வாதிகள் சிலருக்கு நித்திரையில்லை


(கொழும்பு)




இலங்கையின் முன்னணி அரசியல்வாதிகள் சிலர் சுவிஸ் வங்கிகளில் பேணி வரும் கணக்கு விபரங்கள் விரைவில் அம்பலப்படுத்தப்பட உள்ளதாக தி சண்டே லீடர் தகவல் வெளியிட்டுள்ளது. சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தாக்கல்

### இனப்படுகொலைக்கு எதிரான அமைப்பு ஏற்பாடு




(கொழும்பு)

இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின் அமைப்பு (Tamil Against Genocide) இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குப் பதிவு செய்யப்போவதாக நேற்று அறிவித்துள்ளது.

இவ்வழக்கு குற்றவியல் வழக்காக அல்லாமல், சிவில் வழக்காக அமையும் என இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின் அமைப்பு தெரிவித்துள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற அதிரடி நடவடிக்கை

## அவுஸ்ரேலியாவுக்கான இலங்கை தூதுவர் தெரிவு குறித்துச் சர்ச்சை!

(கொழும்பு)

போர்க் குற்ற சர்ச்சை காரணமாக அவுஸ்ரேலியாவுக்கான அடுத்த இலங்கை உயர்ஸ்தானிகரை நிராகரிக்கும் அழுத்தத்தை அவுஸ்ரேலியா அரசாங்கம் எதிர்கொள்வதாக அவுஸ்ரேலியாவின் சிட்னி மோர்னி ஹெரால்ட் பத்திரகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முன்னாள் கடற்படைத் தளபதி திஸேர சமரசிங்க அவுஸ்ரேலியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐ.நா. கூறியுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சு இந்நியமனத்தை பிரச்சினைக்குரியதாக கருதுகிறது என த் ஹெரால்ட் அறிகிறது.

இலங்கையில் தமிழ் பிரிவினைவாதிகளுடனான சிவில் யுத்தம் முடிவடைந்த பின்னர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய மீனவர்களுக்கு கடலில் பாதுகாப்பு இலங்கைக் கடற்படை இனி நெருங்காது

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் கூறியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாதவாறு வெளிவிவகார அமைச்சு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதியை அவரது கோபாலபுரம் இல்லத்தில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. இச்சந்திப்பில் தி.மு.க நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டி. ஆர்.பாலு, தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் தங்கபாலு ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் (12 ஆம் பக்கம் பார்க்க)



# யாழ். மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க உயிர்த்துடிப்பு மிக்க நடவடிக்கை முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டையையும், அதைத் தொடர்ந்து குடாநாட்டிலுள்ள தொல் மரபுரிமைச் சின்னங்களையும் பாதுகாப்பதற்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று தொடக்கம் 28ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கிறீன் கோட்டலில் நடைபெறவுள்ளது. இதன் தொடக்க விழாவில் தேசிய மரபுரிமை அமைச்சர் கலாநிதி ஜெகத் பாலசூரியாவும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, தொல்லியல் பணிப்பாளர் கலாநிதி சௌரத் திஸாநாயக்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு தொடக்கி வைப்பார்கள். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியற் துறையினர், தென்னிலங்கைப் பல்கலைக்கழகத் தொல்லியற் துறையினர் மற்றும் ஏனைய துறை சார்ந்த அறிஞர்களும், மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவோருக்கு யாழ்ப்பாணத்து வரலாறு, தொல்லியல் மரபுரிமைப் பாதுகாப்பு பற்றிய கருத்துக்களையும், பயிற்சிகளையும் அளிக்கவுள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் நோக்கும்', அதைச் செயற்படுத்தும் பொறி முறைகளும் என்னும் பொருளில் கலாநிதி செனரத் திஸாநாயக்க (பணிப்பாளர் நாயகம், தொல்லியற் திணைக்களம்), மரபுரிமைச் சின்னங்கள் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் பொருளில் பேராசிரியர் நிமால் டீ.சில்வா (பட்டய கட்டடக் கலைஞர், மரபுரிமைப் பாது காப்பு நிபுணர்), யாழ்ப்பாணம் - தொல்லியல், வரலாற்று நோக்கு என்னும் பொருளில் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், யாழ்ப்பாணத் தீபகற்பகத்திலுள்ள தொல்லியல் மையங்கள் என்னும் பொருளில் கலாநிதி டி.கே. ஜெயரட்னா, யாழ்ப்பாணத்து மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு என்னும் பொருளில் கட்டடக் கலைஞர் எச். கே. பாலாச்சந்திரா, தொல்லியற் சின்னங்களின் பாதுகாப்பியல், கோட்பாடு, தத்துவங்கள், செயல்முறைகள் மற்றும் ஒழுக்க நியமங்கள் என்னும் பொருளில் கட்டடக் கலைஞர் நிலான் கூரே, வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டினங்கள் நகரங்களின் பாதுகாப்பு மரபுரிமையின் தத்துவங்கள், முகாமைத்துவம், மரபுரிமை முகாமைத்துவம் என்னும் பொருளில் கட்டடக் கலைஞர், தொல்லியாளர், பிரஷாந்த பி. மண்டாவல ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (27)

## கரைச்சி கடற்றொழிலாளருக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகளிற்கு கடற்றொழில் உபகரணங்கள் நாளை வழங்கப்படவுள்ளதாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளர் இ. கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தில் ஏழு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றனர். இவற்றுள் முதல் கட்டமாக உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகளில் பத்துப் பேருக்கு வள்ளங்களும், 20 பேருக்கு வலைகளும் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு வள்ளங்களும், வலைகளும் வழங்கப்பட்டவர்கள் இணைந்து கடற்றொழிலினை மேற்கொள்ள முடியும் என்றார்.

இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலர், பரந்தன் பிராந்திய படையதிகாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (69)

## அசௌகரியங்கள் மலிந்த முற்றவெளி தனியார் பஸ் நிலையம்



(யாழ்ப்பாணம்)

யாழ். முற்றவெளி தனியார் பஸ் நிலையப் பகுதியில் தனியார் பஸ் நடத்துநர்களும் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் அவற்றை நிவர்த்தி செய்து தரும்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

நாளை முதல் யாழ். நகரில் இருந்து புறப்படும் அனைத்து தனியார் பஸ்களும் முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் பஸ் நிலையப் பகுதியில் இருந்தே புறப்படவேண்டும் என யாழ். அரச அதிபருக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இருந்தும் தனியார் பஸ் நிலைய விடுதிகள் கால்நடைகளால் அசுத்தமாக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இவற்றுள் பயணிகள் தங்கிச் செல்லப் பின்னடித்து வருகின்றனர். அத்துடன் இப்பேருந்து நிலையத்தின் முன்பாக வீதி சேதமடைந்த நிலையில் அவற்றிற்கு கற்கள் போடப்பட்டவண்ணமுள்ளது. அது திருத்தப்படவில்லை. இது தவிர பேருந்துகள் நிறுத்தப்படும் பகுதிகளும் உள்நுளையும் பகுதிகளும் குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், இவற்றினூடாக வாகனங்கள் கொண்டு செல்வது மிகுந்த கஷ்டமானதாக உள்ளது. அத்துடன் அங்கு அமைக்கப்பட்டிருக்கும் மலசல கூடத்திற்கும் நீர்வரத்து சீராக இல்லை. மேலும் பஸ் நிலையப்பகுதியும் பாதுகாப்பாக வேலியிடப்படமலும் இரவு நேரங்களில் மதுப்பிரியர்களின் தங்குமிடமாகவும் மாறியுள்ளது.

எனவே, இக்கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நடத்துநர்களும் பயணிகளும் கேட்டுக் கொள்கின்றனர். (


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கே.கே.எஸ். வீதி சம்பியன் லேனுக்கு அண்மையில் 2 1/4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 0772474740


## மரண அறிவித்தல்

### அமரர் திருமதி நடராசா செல்லக்கண்டு

தும்பளை தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், உடுவில் இராமலிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா செல்லக்கண்டு அவர்கள் 22-01-2011 சனிக்கிழமையன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், மண்டலேஸ்வரி, ஆனந்த நடராசா, குணராஜேஸ்வரி, சிவநடராசா, தில்லை நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் அப்புலிங்கம், கமலாதேவி, குணமணி (ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், பிரசாந்த், கபில் துஷ்யந்தி, சுஜீபன், சஜீபன், சிவானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 25-01-2011 செவ்வாய்க்கிழமை, உடுவில் - இராமலிங்கம் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(இ)

## மரண அறிவித்தல்

### அங்கப்பா முருகானந்தம் (நாதஸ்வர வித்துவான்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அங்கப்பா முருகானந்தம் (நாதஸ்வர வித்து வான்) அவர்கள் நேற்று முன் தினம் (22-01-2011) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அங்கப்பா சிவயோகம் ஆகியோரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜீவாகரன், பிரபாகரன், கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமரர் சிவசாமி, கனகாம்சம், குஞ்சிதபாதம் மற்றும் விஜயலட்சுமி நாகேஸ்வரன், அம்சவல்லி, ராதா, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம் ஜெகதாம்பாளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-01-2011 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தனக் கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சைவப்பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(இ)


எமது நிறுவனத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT, HDIT, DIT பட்டம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் --Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும். MCS

BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT, DIT ,HDIT பெறும் எமது நிறுவன மாணவர்கள்



BIT : P.Kobikrishna, J.Satheeshan, R.Naresh HDIT : A.Thirumagal

DIT : T.Subaharan,Mary Nithanjali, S.Sumathy, V.Vanaja, S.Priyengah,S.Logeswary,N.Nalayini,A.Abitha

BIT? கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L 2010 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம் , 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் பயில முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 75,000 ரூபா மட்டுமே.

MCS?
- ஐநா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாடடிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

BIT @ MCS?
* ICDL (International Computer Driving License)
* OCJP (Oracle Certified Java Programmer)
* MCSE (Microsoft Certified Systems Engineer)
* BCS (British Computer Society)
CCNA (Cisco Certified Network Associate)

100% * OFF

SMS your name & course to 0772 395 895

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764 பதிவுகள் 31.01.2011க்கு முன்னர்

உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றிச்செல். கோழையாகவும், வேடதாரியாகவும், இருக்காதே.
- விவேகானந்தர் -


தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com


## புதிய கோஷம்

தமிழ் மக்களுக்கு சோறு வேண்டுமா? சுதந்திரம் வேண்டுமா? என்று கேட்டால் ஒரு தரப்பு சோறு என்றும், இன்னொரு சாரர் சுதந்திரம் தான் என்றும் சொன்னார்கள். மூன்றாவது அணியினரோ சோறும், சுதந்திரமும் என்றனர்.

பின்னாளில் தமிழ் இயக்கங்கள் இப்படி முக்கோண வடிவில் செயற்பட்டு ஆளை ஆள் அடித்துப் பின்னர் அழிந்தேபோயினர்.

இப்போது மக்களிடம் அதே கேள்வியைக் கேட்டால், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று ஓடி ஒழிகின்றனர்.

அதே தமிழ் மக்களிடம் இப்போது புதிய தொரு புத்திசாலித்தனமான கேள்வி கேட்கப்படுகிறது.

தமிழ் மக்களுக்குத் தேவையானது, உரிமையா? சலுகையா? இந்தக் கேள்விக்குத் தமிழ் மக்கள் எந்தப் பதிலையும் சொல்லத் தயாராக இல்லை. ஆனால், உரிமை, சலுகை இரண்டுக்குமான வித்தியாசம் என்ன என்பதை மட்டும் தயவு செய்து தெளிவுபடுத்துங்கள் என்பதுதான் மக்களின் நிலைப்பாடாக இருக்கின்றது.

உரிமை என்றால் தனி நாடு பெற்றுத் தருவது. இப்படித்தான் அன்று முதல் இன்று வரை சொல்லி வந்திருக்கிறார்கள். அப்படியென்றால் அரசுடன் உரிமை பற்றிப் பேசப் போகின்றோம் என்று கூறும் கூட்டமைப்பு தனி நாட்டைப் பெற்றுத் தரத்தான் பேச்சுவார்த்தை நடத்தப் போகின்றதா? ஆனால், ஜனாதிபதியோ, புலிகள் கேட்டதை எவரும் கேட்கவேண்டாம். அதைக் கொடுக்கமாட்டேன், கொடுப்பதாக இருந்தால் அதைப் பிரபாகரனிடமே கொடுத்திருப்பேன் என்று கூறுகின்றாரே. இது பற்றிய விளக்கம் வேண்டும்.

அதேபோல், சலுகை என்றால், அபிவிருத்தி, மீள் கட்டுமானம், தொழில் வாய்ப்பு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதும், இவற்றுக்காக அரசுடன் இணங்கிச் செயலாற்றுவதும் தானா? அப்படியானால் அதைச் செய்வதற்கு நீங்கள் எதற்கு?

சலுகைக்கும் - உரிமைக்கும் நீங்கள் எந்தப் புள்ளியில் முரண்படுவதாக தமிழ் மக்களிடம் கூற முற்படுகின்றீர்கள். தேர்தல் நேரம் என்பதால் இப்படி ஒரு தீக்குச்சியை உரசிப் பார்க்கின்றீர்களா? எதிர்ப்பு அரசியல் நடத்திக் கொண்டு அரசின் கதவை நெருங்கவே நேரம் கேட்டுக் காத்திருக்கும் உங்களால் உரிமையைப் பெற்றுத் தர முடியுமா? இல்லாவிட்டால் உரிமை வேறு, தனி நாடு வேறு என்று புதுக்கதை ஏதும் தயார் செய்து வைத்திருக்கின்றீர்களா?

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடான மாகாண சபை தான் தீர்வு என்று தெளிவாகத் தெரிந்த பின்பும், உரிமை என்று கூறும் தீர்வு வடிவம் எத்தகையது, தயவு செய்து தெளிவுபடுத்துங்கள்.

இப்படியெல்லாம் கேள்விக் குவியலோடு தமிழ் மக்கள் இருக்கையில் சிரித்துக் கொண்டே வாக்குக்கேட்டு வரப்போகிறார்கள். மக்கள் வரவேற்பார்களா?

ஆசிரியர்.

# உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க 6,96,587 பேர் தகுதி பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 6,96,587 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் இவர்கள் தமது வாக்குகளைச் செலுத்துவதற்கு 554 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 6,06253 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 90,334 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் 459 வாக்குச்சாவடிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 95 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்தது.

இவற்றின் விபரம் வருமாறு,

பருத்தித்துறை நகரசபைக்கு 14,901 பேரும், சாவகச்சேரி நகரசபைக்கு 20,516 பேரும், வல்வெட்டித்துறை நகரசபைக்கு12,639 பேரும், நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு 4,996 பேரும், வேலணைப் பிரதேசசபைக்கு 31,762 பேரும், ஊர்காவற்றுறை பிரதேசசபைக்கு 18,275 பேரும், காரைநகர் பிரதேச சபைக்கு 16,516 பேரும்,

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு 47,399 பேரும், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கு, 55,142 பேரும் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு 68,418 பேரும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு 56,334 பேரும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு 70,669 பேரும்,

வடமராட்சி கிழக்கு, மேற்குப் பிரதேச சபைக்கு 53,649 பேரும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு 36,834 பேரும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு 52,922 பேரும், நல்லூர் பிரதேச சபைக்கு 45,261 பேரும்,

கரைச்சிப் பிரதேச சபைக்கு 67,438 பேரும், பூநகரிப் பிரதேசசபைக்கு 12,876 பேரும், பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைக்கு 10,020 பேரும், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் யாழ்.உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்தது. (பா)

## நெல்சிப் வீதிப்புனரமைப்பு அடுத்த மாதம் ஆரம்பம்

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேசசபைகள் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ள "நெல்சிப்"திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மேற்கொண்டு வருவதுடன் இத்திட்ட வேலைகளுக்கான நிதி இதுவரை பிரதேச சபைகளுக்குக் கிடைககவில்லை எனவும் நிதி கிடைத்ததும் வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை "நியாப்" திட்டத்தின் வேலைத்திட்ட வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் புதனன்று தாக்கல்

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை த.தே.கூட்டமைப்பு நாளை மறுதினம் புதன்கிழமை தாக்கல் செய்யவுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் இந்த வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய வவுனியா மாவட்டத்திற்கு சிவசக்தி ஆனந்தன், மன்னார் மாவட்டத்திற்கு செல்வம் அடைக்கலநாதன், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வினோனோகராதலிங்கம் ஆகியோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை மேற்படி மூன்று மாவட்டங்களுக்குமுரிய வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விடும் என தெரிவிக்கப்படுகின்றது. கூட்டமைப்புடன் இணைந்துள்ள புளொட் அமைப்பின் சித்தார்த்தன், த.வி.கூட்டணியின் ஆனந்தசங்கரி ஆகியோர் கேட்ட தற்கிணங்க ஆசனங்களின் ஒதுக்கீடுகள் தொடர்பான இறுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட எம்.பி. சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஒரு நகரசபை உள்ளிட்ட 4 பிரதேச சபைகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 4 பிரதேச சபைகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பிரதேச சபைகளுக்கும் த.தே கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் இதில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

## இன்று திறப்பு விழா

(வடமராட்சி)

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் அலுவலகம் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நாவலர் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை திருகோணமலையில் இயங்கிவந்த இந்த திணைக்களம் இன்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படவுள்ளதுடன் இதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இதன்மூலம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மேற்படி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் தமது கடமைகளை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு

(தொல்புரம்)

மெல்லக் கற்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் நன்மை கருதி அவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் கோண்டாவில் வேதபாராயணம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது-

கோண்டாவில் பகுதி சமுர்த்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் கோண்டாவில் உப்பு மடத்தடியில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலைய நிர்வாகமும் இணைந்து இச் செயற்றிட்டத்தினை இப் பகுதியில் மேற்கொண்டு வருகின்றன.

தினமும் மாலை வேளைகளில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்கள் சலுகைக் கட்டண அடிப்படையில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அண்மையில் வன்னியில் இருந்து கோண்டாவில் பகுதியில் மீளக்குடியேறிய பெருமளவான மாணவர்கள் அடிப்படை எழுத்துப் பயிற்சியினை இங்கு பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (26)

## மரக்கறிச் செய்கையில் இராணுவம்

வடமாகாணத்தில் உள்ள பத்து இராணுவ முகாம்களில் மரக்கறிச் செய்கையை மேற்கொள்ள இராணுவம் திட்ட மிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வடக்கில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து முகாம்களில் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

250 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மரக்கறிச் செய்கை மூலம் பெறப்படும் மரக்கறிகள் குறைந்த விலையில் மக்களுக்கு விற்பனை செய்யப்படும் எனவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

## ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

வெளிநாட்டில் பணிபுரியும் பணியாட்களுக்கு விசேட ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள் ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலம்பேணல் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபட்டு வருகின்றது என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணியாட்களாக பணிபுரிபவர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இவ் ஓய்வூதியத் திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# மாணவர் சமூகத்தின் நெறிபிறழ்விற்கு பெற்றோரின் அக்கறையீனமே காரணம்

## முறிவு நோவு வைத்தியர் எஸ்.இளையராஜா

(அச்சுவேலி)

பெற்றோர்களின் அக்கறையீனமும், பிள்ளைகளை சரியாகப் புரிந்துகொள்ளாத் தன்மையுமே மாணவச் சமூகத்தின் நெறிபிறழ்வுக்கும், தவறான வழிநடத்தல்களுக்கும் மூல காரணமாக அமைகின்றது. இந்நிலையை மாற்றி ஆக்கபூர்வமான அறிவுமிக்க மாணவச் சமூகத்தினை உருவாக்கப் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் உடனிருந்து அவர்களின் தேவைகள், விருப்புவெறுப்புக்களை அறிந்து அதற்கேற்ப அவர்களை வழிப்படுத்த வேண்டும். இவ்வாறு பிரபல முறிவுநோவு வைத்தியர் எஸ்.இளையராஜா தெரிவித்தார்.

அண்மையில் ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய தரம் 01 மாணவர்களின் கால்கோள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து தனது உரையில்-

சமூக ஒற்றுமையினை வளர்த்துக் கொள்வதற்கான சிறந்த கருவியாக விளங்குபவர்கள் மாணவர்கள். எனவே மாணவர்களிடத்தில் பொதுநோக்குடைய மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதுடன் சகோதரத்துவத்தினையும் உருவாக்க வேண்டும். இதன் மூலம் புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குமுடைய நல்லதோர் சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவிக்க முடியும். இதற்குப் பாடசாலைகளின் பங்களிப்பு மட்டும் போதுமானதாக அமைந்துவிடாது. ஆகவே பெற்றோர்களும் தாமும் தமது கடமைகளும் என்று இருந்துவிடாது பிள்ளைகளுக்காகவும் நேரத்தை ஒதுக்கி அவர்களின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாகச் செயற்பட வேண்டியதுடன், பிள்ளைகளின் அன்றாடக் கருமங்கள் அனைத்தையும் கண்காணித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் பொறுப்புமிக்கவர்களாக மாறிப் பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே வழிப்படுத்தி வளர்த்துக் கொளவார்களாயின் அவர்களது வாழ்வு என்றும் வளம் பெறுவதுடன் நற்பெயரையும் பெற்றுக்கொள்வார்கள் என்றார். (03)

## ஊரி கடற்கரை வீதிக்கு மின்வழங்க கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகர் ஊரி கடற்கரை வீதிக்கு மின்சாரம் வழங்குமாறு பிரதேச சபையிடம் ஊரி கிராம முன்னேற்றச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காரைநகரில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான ஊரி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அதிகாரிகள் தயக்கம் காட்டி வருவதாகவும், தமது பிரதேசத்துக்கு வீதி மின் இணைப்பு வழங்கும்படி பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இம்முறை 2011 ஆம் ஆண்டுத்திட்ட முன்மொழிவில் இவ்வியம் இடம்பெற்றுள்ளதாகவும் விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச சபை தெரிவித்துள்ளதாகவும் ஊரி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் சி.சபாரத்தினம் குறிப்பிட்டார். (10)


# வகுப்பறை மதிப்பீட்டுப் படிவங்கள் பாடசாலைகளுக்கு வழங்கல்

(அச்சுவேலி)

வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்யும் வகையில் ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து புள்ளியிடல் வழங்குவதற்கான வகுப்பறை மதிப்பீட்டுப் படிவங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்பப்பிரிவு மற்றும் இடைநிலைப் பிரிவு ஆகியவற்றிற்கெனத் தனித்தனியாகத் தயாரித்து வழங்கப்பட்டுள்ள இம் மதிப்பீட்டுப் படிவம் கற்பித்தலின்போது பாடப்பிரவேசம், பாடஅபிவிருத்தி, மதிப்பீடு, ஆசிரியர் ஆளுமை ஆகிய விடயங்களுக்கு புள்ளியிடுவதற்கென பல்வேறு உபவிடயங்களையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படிவங்கள் மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பின் பேரிலேயே கோட்டக்கல்வி அலுவலகங்களினூடாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (03)



யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவின்போது புதிய மாணவர்கள் மூத்த மாணவர்களால் மாலைசூட்டி வரவேற்கப்படுவதுடன், அதிபர், ஆசிரியர், சிறப்பு விருந்தினருடன் மாணவர்கள் காணப்படுகின்றனர். (03)

# இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயமும்

(அரியாலை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய்க் கல்விக் கோட்டத்தில் இயங்கும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் இசுறு பாடசாலையாக மாற்றியமைக்கப்பட உள்ளது.

கண்டி வீதிக்குக் கிழக்காக மாங்குளம் சந்தியில் இருந்து செல்லும் முல்லைத்தீவு வீதியில் புதுக்குடியிருப்பு வீதி சந்திக்கும் இடத்தில் முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை சகல வசதிகளைக் கொண்ட நகரப் பாடசாலைகளுக்குச் சமமாகப் பௌதீகவளம், ஆளணி வளம், தொழில் நுட்ப மற்றும் தொடர்பாடல் கல்வி வளம் பொருந்தியதாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இந்த "இசுறு" பாடசாலைகள் தரம் ஆறில் இருந்து உயர்தரம் வரை வகுப்புகளைக் கொண்டிருப்பதுடன் உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய சகல துறைகளையும் கற்கை நெறிகளையும் கொண்டதாக விரிவுபடுத்தப்படும்.

இந்தப் பாடசாலையிலேயே ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டம் இயங்கி வருகிறது. பிரதேச மாணவர்கள் வேறு இடங்களை நாடாது சொந்தப்பகுதியிலேயே சகல வளம் கொண்ட பாடசாலைகளில் கற்கை வசதி ஏற்படுத்துவதே கல்வி அமைச்சினதும் திணைக்களத்தினதும் இலக்காகும். (23)

# விஞ்ஞான ஆசிரியர்களுக்கு செய்முறைச் செயலமர்வு

(அரியாலை)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறைச் செயலமர்வு கடந்த இரண்டு வாரகாலங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் நடைபெறும் இந்தத் தொடர் செயலமர்வுகள் அந்தப் பகுதி கோட்டக்கல்விப் பாடசாலைகளில் நடைபெற்று, இறுதியான செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிமனையின் வளவாளர்களும் பாடசாலைகளில் கடமையாற்றும் விஞ்ஞான பாடஆசிரியர்களும் இந்தக் கருத்தமர்வுகளை நடத்தி வருகின்றனர். விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர், வள்ளிநாயகி இந்நச் செயலமர்வுகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (23)

# சிறப்பாக நடைபெற்ற கால்கோள் விழா

(தாளையடி)

தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கால்கோள் விழா அண்மையில் பாடசாலை அதிபர் ந.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ், சிறப்பு விருந்தினராக தாளையடிப் பங்குத் தந்தை ஜேம்ஸ்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (70)

## மலசலகூட நீர்விநியோக குழாய் உடைவு

# போதனாவைத்தியசாலை பத்தாம் இலக்க விடுதி நோயாளர்கள் உட்பட அனைவரும் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் பத்தாவது இலக்க விடுதியில் உள்ள மலசலகூட நீர்விநியோகக் குழாய் உடைந்ததினால் அதிலிருந்து பெருகிய நீர் விடுதி முழுமையாகப் பரவியதனால் நிலத்தில் தங்கியிருந்த நோயாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த விடுதியின் மலசலகூட நீர் விநியோகக் குழாய் ஏற்கனவே சிறிது உடைந்த நிலையில் இருந்து வந்ததாகவும், இதனை விடுதி சுத்திகரிப்பாளர் கண்டிருந்தும் அதனைத் திருத்துவதற்கு முற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மலசலகூடப் பைப் உடைந்ததினால் மலசலகூடம் நிரம்பி வழிந்ததுடன், அந்த விடுதியின் விறாந்தை, சாப்பாட்டு அறை என்பன அசுத்த நீரினால் மூழ்கியிருந்ததாகவும், இச்சமயம் வைத்தியர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, போதனா வைத்தியசாலையின் விடுதிகள் சுத்திகரிப்பு வேலைகள் தனியார் ஒருவரால் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முன்னர் வைத்தியசாலை தொழிலாளர்கள் ஒரளவுக்கு திருப்திகரமாகச் செய்து வந்ததாகவும், சுத்திகரிப்பு வேலைகள் தனியார் கையில் சென்ற பின்னரே இத்தகைய சீர்கேடான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (104)

# துறைமுகம் செல்லும் வீதியை அகலிக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்.நிருபர்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போவிலிருந்து துறைமுகம் வரையான வீதியை அகலிக்க வேண்டுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒரேயொரு வாகனம் மட்டும் செல்லக்கூடிய அகலம் குறைந்த குறுகிய வீதியாக இவ்வீதி அமைந்துள்ளதால் இதனூடாகப் பயணம் செய்யும் வாகனங்களின் சாரதிகளும், பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.1991 இடப்பெயர்வின் பின்னர் நீண்ட காலமாக இவ்வீதியில் வாகனப் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடம் முதல், துறைமுகம் வரை வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்வீதியில் ஒரு வாகனம் செல்லும் போது அங்கிருந்து வரும் வாகனம் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# வெளிநாடு சென்ற வாக்காளர் விபரம்; தேர்தல் திணைக்களம் திரட்டுகிறது

(கொழும்பு)

**எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னதாக கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் உயிரிழந்த மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டுமாறு தேர்தல்கள் ஆணையாளரினால் அனைத்து கிராம சேவையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதியளவில் முழுமையான தகவல்கள் திரட்டப்பட்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட தேர்தல் காரியாலயங்களில் தகவல்களை ஒப்படைக்க வேண்டும் என செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஏற்படக்கூடிய முறைகேடுகளை தவிர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே தேர்தல்கள் ஆணையாளரின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிராமசேவையாளர்களினால், உயிரிழந்த மற்றும் வெளிநாடுகளுக்கு சென்றோர் தொடர்பாக உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு விபரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அது குறித்து ராஜகிரிய தலைமைக் காரியாலத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அதனையடுத்து தேர்தல் செயலகத்தினால், மரணித்தவர்களை குறிக்கும் விதத்தில் 'டி' எழுத்தையும், வெளிநாடுகளுக்குச் சென்றவர்களை குறிக்கும் விதத்தில் 'ஏ' எழுத்தையும் குறிப்பிட்டு வாக்களிக்க தகுதி பெற்றோர் பெயர்ப் பட்டியல் அடங்கிய புத்தகங்கள் வெளியிடப்படும்.

அவற்றை வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட பொறுப்பதிகாரிகளுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் குறிப்பிட்டார்.



அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள புதிய வீடுகளில் ஒன்றை நிர்மாணிக்கப் பொறுப்பெடுத்த முன்னாள் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா பெனற் கொன்சன்ரைன் அடிகளார் குடியிருப்பாளர்களுடன் உரையாடுவதையும், அருகில் நெய்தலம் இயக்குநர் அருடதிரு யெ.ஜெயசேகரம் அடிகளாரையும் படத்தில் காணலாம். (68)

# கட்டாக்காலி கால்நடைகளால் நெற்செய்கையாளர் பாதிப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகரில் பெரும்போக நெற்செய்கை அமோக விளைச்சலைப் பெற்றுவரும் அதே வேளை கட்டாக்காலி ஆடு, மாடுகள் பெரும் சேதத்தை ஏற்படுத்துவ தாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது நெல்வயல்களில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு பெரும் பணச் செலவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அத்துமீறிப பிரவேசிக்கும் கால்நடைகளால் தமக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருவதாகவும், கடந்த வாரம் விவசாயிகள் பலரது வயல்களிலும் முற்றிக் கதிர் வரும் நிலையில் இருந்த பயிர்களைக் கால்நடைகள் உட்கொண்டு பெரும் அழிவினை ஏற்படுத்தியுள்ளதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்தப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படாத வரையில் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுபபடுத்துவது கடினம் எனவும், பெரும்போக உத்தியோகத்தர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (10)

# மன்னார் மாவட்டத்தில் வாக்களிக்க 88916 பேர் தகுதி பெற்றுள்ளனர்

(மன்னார்)

எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 88,916 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இதன்படி மன்னார்ப் பிரதேச சபைக்கு 24,658 பேரும், முசலி பிரதேச சபைக்கு 13,151 பேரும், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 18,707 பேரும், நானாட்டான் பிரதேச சபைக்கு 16,421 பேரும், மன்னார் நகர சபைக்கு 15,979 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மிக அதிகமான வாக்காளர்களையும், வாக்களிப்பு நிலையங்களையும் மன்னார் பிரதேச சபையே கொண்டுள்ளது.

# மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

வேதரடைப்பு கிராம முன்னேற்றச் சங்கம் மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்களை நடத்தி வருகிறது.

மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்களை வழங்குவதற்கு வேண்டிய நிதியினைத் தாம் வழங்குவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளதாக மேற்படி கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

# வேம்படி - 2 ஆம் குறுக்குச் சந்தியில் மதகுடன் சேர்ந்த குழியால் விபத்து



(சண்டிலிப்பாய்)

யாழ்ப்பாணம் வேம்படி வீதியின் இரண்டாம் குறுக்குச் சந்தியிலுள்ள மதகு சேதமடைந்து ஏற்பட்ட குழியினால், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மதகில் ஏற்பட்ட குழி சிறிதாக இருந்து தற்போது பெரிதாக உடைந்துள்ளது.

இந் தக் குழியை அடையாளப்படுத்த அயலவர்கள் தெனனங்குற்றியை வைத்து அடையாளப்படுத்திய போதிலும், விபத்தைத் தடுக்க முடியவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை இவ வீதியால் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற இரண்டு மாணவிகள், இந்தக் குழிக்கு அடையாளப்படுத்தப்பட்ட தென்னங்குற்றியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த வீதியூடாகத் திருக்குடும்பக் கன்னியர் தேசிய பாடசாலை மாணவிகள் உட்பட பெருமளவானோர் பயணிக்கின்றனர். எனவே, இந்தக் குழியை விரைவாகப் புனரமைக்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (54)

# விவசாய, மருத்துவ உதவிகளுக்காக ஐ.சி.ஆர்.சியின் பல்வேறு பணிகள்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் செயற்பட்டு வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கடந்த வருடம் செப்ரெம்பர் மற்றும் டிசம்பர் மாதத்திற்கிடையில் மீள்குடியேறிய மக்கள் மற்றும் ஜெய்ப்பூர் நிலையம் என்பவற்றுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளதாக அது அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், 360 இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், வடக்கிலுள்ள சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அவர்களின் செயற்பாட்டை இலகுபடுத்தவென 45 ஸ்கூட்டர்கள் மற்றும் 26 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிலையத்திற்குச் செயற்கை அவயவங்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் உட்பட பல்வேறு உதவிகளும் வழங்கப்பட்டன.

ஜெய்ப்பூர் நிலையத்திலுள்ள இரு உதவியாளர்களுக்கு ஐ.சி.ஆர்.சியின் இயன் மருத்துவ சேவையாளர்களால் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட மாதங்களில் 200 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் ஐ.சி.ஆர்.சியின் சேவையால் ஜெய்ப்பூர் நிலையத்திலிருந்து பயனடைந்தனர்.

அத்துடன், பல்வேறு சம்பவங்களால் அவயவங்களை இழந்த 85 இற்கும் மேற்பட்டவர்களுக்கு, செயற்கை அவயவங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பிறப்பிலிருந்து குறைபாடு அல்லது இடையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு 45 சார்பு உறுப்புகள் உற்பத்தி செய்யப்பட்டன. 40 ஊன்றுகோல்கள் மற்றும் நடமாடுவதற்கு உதவும் இதர கருவிகளும் வழங்கப்பட்டன.

இதேபோன்று அவயவ அறுவைச் சிகிச்சைக்கான இரண்டு பொதிகளும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

(24.01.2011 திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி தை 10
இராகுகாலம் 8.06– 9.36, சுபநேரம் 12.36 –2.06,
பஞ்சமி பி.ப.4.58, உத்தரம் பி.ப.4.55,
சித்தம், சண்டேஸ்வரர் குருபூசை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

–ஆதினி–

மேடம்:– நல்லோர் சேர்க்கை, தொழிலில் லாபம், பெரியோர் உதவி.

ரிஷபம்:– இரக்கப்படல், உதவிகள் செய்தல், மதிக்கப்படல்.

மிதுனம் :– காரியத்தடை, நண்பர் விரோதம், பொருள் இழப்பு.

கடகம்:– செயல்களில் தாமதம், மனக் குழப்பம், நண்பர் விரோதம்.

சிம்மம்:– நற்செய்தி கிடைத்தல், பாராட்டப்படல், துணிவான முடிவு.

கன்னி :– திருடர் பயம், வாக்கு வாதப்படல், தொழிலில் நஷ்டம்.

துலாம் :– பணக் கஷ்டம், நினைத்த காரியத்தடை, மனக் குழப்பம்.

விருச்சிகம்:– உதவிகள் செய்தல், பெரியவர்கள் பாராட்டு, எதிரிகள் நேசம்.

தனுசு:– எதிரிகள் நண்பராவர். நண்பர் உதவி, நற்செய்தி கிடைத்தல்.

மகரம்:– தொழிலில் ஏற்றம், பணவரவு, மனைவி வழியால் உதவி.

கும்பம் :– குடும்பத்தில் சுபசெலவு, நினைத்த காரியச் சித்தி, இலாபமான பயணம்.

மீனம்:– காரியத் தடை, விரோதத்தை வளர்த்தல், பொருள் இழப்பு.

# இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க புலிகளும், மேற்குலகநாடுகளும் கூட்டாக முயற்சி

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள புலிகள் வளம் மிக்க மேற்கு நாடுகளுடன் இணைந்து இலங் கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் முயற்சிகளிலும், அரசாங்கத்தின் மீது போர்க் குற் றச்சாட்டுகளைச் சுமத்தும் நட வடிக்கைகளிலும் ஈடுபட்டிருப் பதாக வெளிவிவகார அமைசசர் ஜீ.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டினார்.

அனுராதபுரத்தில் சிறிலங் கா சுதந்திரக் கட்சி அமைப் பாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

“புலிகள் இராணுவ ரீதி யாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள போதும் வெளிநாடுகளிலுள்ள உறப்பினர்கள் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க முனைகின்றனர்.

அத்துடன், வளம்மிக்க மேற்குநாடுகளுடன் இணைந்து அரசு மீது போர்க் குற்றச்சாட்டு களை சுமத்த முனைகின்றனர். அவர்களின் பிரதான இலக்கு சுற்றுலாப் பயணிகளின் வரு கையைத் தடுப்பதாகும். புலி களின் இந்த முயற்சிகளைத் தோற்கடிக்கின்ற பொறுப்பு உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் உள்ள இலங்கையின் துறைசார் வல்லுநர்களிடம் இருக்கிறது.

போர் முடிவடைந்து விட் டது. புலிகள் அனைத்து வழி களிலும் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். அது போன்ற நெருக் கடியான நிலைக்கு நாம் இனி மேல் முகம் கொடுக்க வேண்டி யதில்லை. ஆனால், அதற்கான அச்சுறுத்தல் முற்றாக நீங்கி விட்டதாகக் கருதக்கூடாது.

புலிகள் ஆதரவு சக்திகள் இலங்கைக்கு எதிராக அனைத் துலக ரீதியாகப் பாரிய போர் ஒன்றைத் தொடுத்துள்ளனர். இது பொருளாதாரப் போர். இதற்குஆட்டிலறிகளையோ, குண்டுகளையோ,ஜெற் போர் விமானங்களையோ நாம் பயன்படுத்த முடியாது.

பொருளாதார ரீதியாக இலங்கையைத் தனிமைப்படுத்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும் மேற்குலக நாடுகள் கனடா, அமெரிக்கா போன்றன முற்படுகின்றன. இலங்கையில் வெளிநாடுகள் முதலீடு செய்வதைக் கெடுக் கும் வகையிலும்,இலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் வரு கையைத் தடுக்கும் வகையி லும், வெளிநாடுகளில் இலங்கை சந்தை வாய்ப்புக்கள் பெறு வதைத் தடுக்கும் வகையிலும் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு நாளும் நாளேடு களில் இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் செய்திகள் வெளி யாகின்றன. எமது நாட்டின் தலைவர்களையும் முப்படை களின் தளபதிகளையும் அனைத துலக போர்க்குற்றத் தீர்ப்பாயம் முன்பாகக் கொண்டு செல்வ தற்கு சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

கனடாவின் ரொறன்ரோவில் புலிகள் ஆதரவு சக்திகள் பாரிய நிதி சேகரிப்பு நட வடிக்கை ஒன்றை மேற்கொண் டுள்ளனர். இந்த நிதி எமது நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்காக பயன் படுத்தப்படவுள்ளது. நாம் இதற்கு எதிராகப் போராடத் தயாராக இருக்க வேண்டும். இதற்கு அனைத்துத் துறைசார் வல்லு நர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் அலுவலகங்கள் மூடப்பட்டாலும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறும்

(கொழும்பு)

வடக்கிலுள்ள பணியகங்கள் மூடப்பட்டாலும் அங்கு தமது செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று செஞ்சிலுவைக் குழுவின் ஊடகப் பேச்சாளர் சரசி விஜேரட்ண தெரிவித்தார்.

அரச அதிகாரிகளுடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுக்களை அடுத்து மார்ச் 31ஆம் திகதியுன் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் பணியகங்களை மூடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணியகங்கள் மூடப்பட்ட பின்னரும் செஞ்சிலுவைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறும்.

கொழும்பில் இருந்து அவை ஒருங்கிணைக்கப்படும்.

அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவுக்கு இது ஒன்றும் புதிய விடயம் அல்ல.வேறும் பல நாடுகளிலும் கூட இதுபோன்ற மத்திய பணியகத்தில் இருந்து பணிகள் முன்னெடுக்கின்றோம். வடக்கிலுள்ள பணியகங்கள் மூடப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைக் குழுவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜெய்ப்பூர் உடல்உறுப்புக்களை இழந்தோருக்கான புனர்வாழ்வு நிலையத்தின் பணிகளும், தடுப்பு முகாம்களில் உள்ளவர்களைப் பார்வையிடச் செல்லும் அவர்களின் குடும்பத்தினருக்கான உதவிகளும் தொடர்ந்து வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# போரில் கணவரை இழந்த பெண்கள் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்

## வண.ஒஸ்வேல்ட் பி.பெய்த் கோரிக்கை



(கொழும்பு)

போரின் போது கணவர் மாரை இழந்த பெண்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. சமாதானம் மற்றும் அபிவிருத் திக்கான சம்மேளனத் தலைவர், வணக்கத்துக்குரிய ஒஸ்வேல்ட் பி பெய்த் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில கடந்த வாரம் கருத்துரைத்த அவர்,அரசாங்கம் இந்தப் பெண் கள் விடயத்தில் அக்கறை செலுத்துவது மிக முக்கியமான விடயமாக இருப்பதாகக் குறிப் பிட்டார்.

இந்தநிலையில் 2011 ஆம் ஆண்டை இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஆண்டாக பி ரகடனப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

போரினால் கணவர்மாரை இழந்த பெண்களின் குடும்பங் களில் பலர், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் திறமைச் சித்தியை கொண்டுள்ள போதும் போரின் காரணமாக அவர்களின் படிப்பைத் தொடர முடியாத நிலைக்கு ஆளாகியி ருந்ததாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந்த நிலையில் கணவன் மாரை இழந்த பெண்கள், சமூ கத்தினால் நிராகரிக்கப்படுவ தாகவும் ஒஸ்வேல்ட் குறிப் பிட்டுள்ளார்.

இதன் காரணமாக அந்தப் பெண்கள், கடினமான தொழில் களில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்ச் சமூகத்தை பொறுத் தவரையில் கணவன்மாரை இழந்த பெண்களின் நிலை மிகவும் சிக்கலான ஒன்று எனக் குறிப்பிட்ட அவர், தமிழ்ச் சமூ கத்தில் கணவன்மாரை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளாமையானது அந்தப் பெண்களின் வாழ்க்கையில் பாதிப்புக்களைத் தொடர வழி யேற்படுத்துவதாக குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தச் சாட்சி யமளிப்பின் போது கிழக்கு மாகாணத்தில் இருந்து வந் திருந்த 52 வயதான குமார் மகேஸ்வரி,43 வயதான சிவந்தி மனோகரன்,40 வயதான ஜெய சீலன் லொரீட்டா ஆகியோரும் தமது கருத்துக்களை வெளி யிட்டனர்.

போரினால் கணவன்மாரை இழந்த பெண்களுக்காக யார் குரல்கொடுக்கிறார்கள் என்ற கேள்வியை அவர்கள் இதன் போது எழுப்பினர்.

# நிவாரணப்பொருட்களில் மோசடி சங்க முகாமையாளர் பணிநிறுத்தம்

(கொழும்பு)

வெள்ளதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளரை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு மற்றும் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை பகுதிக்கு விஜயம் செய்தபோது அப்பகுதி மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து குறித்த கூட்டுறவு சங்கத்தில் நிறுத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களைத் தான் பரிசோதித்த போது ஒவ்வொன்றிலும் 200 மற்றும் 300 கிராம் நிறை குறைந்ததைக் கண்டேன் என அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்தே குறித்த பலநோக்குக் கூட்டுறவு சங்க முகாமையாளரை வேலையிலிருந்து இடைநிறுத்தியதாக அமைச்சர் சுபைர் மேலும் கூறினார்.

# இடைக்காலத் தலைமைத்துவத்தால் முரண்பாடுகளைக் களைய முடியும்

## ஐ.தே.கட்சிக்கு சந்திரிகா ஆலோசனை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எற்பட்டுள்ள முரண்பாடுகளை களைய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புதிய ஆலோசனை ஒன்றை வழங்கி யுள்ளார். அண்மையில் கொழும் பில் இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றின்போது ஐக்கிய தேசியக் கட்சியினருடன் அவர் கலந்துரையாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய,ஹர்சா டி சில்வா, போதி ரணசிங்க போன றோருடன் சந்திரிகா கலந்து ரையாடல் நடத்தினார்.

இதன் போது கருத்துரைத்த அவர், ரணில் விக்கிரமசிங்க மற் றும் சஜித் பிரேமதாஸ ஆகி யோருக்கு இடையிலான தலை மைத்துவப் போட்டியில் யார் வென்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தவிடக் கூடாது எனத் தெரிவித்தார்.

எனவே கருஜயசூரியவை இடைக்காலத் தலைவராக நிய மிப்பதன் மூலம் இந்தப் பிரச்சி னையைத் தீர்க்கலாம் என்ற கருத்தை அவர் முன்வைத்தார்.

எது எப்படியிருப்பினும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸாவுக்கும் இடையிலான தலைமைத்துவப் போட்டி தொடர்ந்துகொண்டி ருப்பதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எப்பொழுதும் இணைந்துள்ள இலங்கையுடனான உறவுகள்



(கொழும்பு)

பாகிஸ்தான் எப்போதும் இலங்கையுடன் இணைந்திருக் கும் என அந்த நாட்டின் கூட்டுப்படை தலைமையதிகாரி தெரிவித்துள்ளார். மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஜெனரல் ஆஷ்பக் பர்வேய்ஸ் கயானி இவ்வாறு தெரிவித்தர்.

சப்புகஸ்கந்தவில் உள்ள பாதுகாப்பு கல்லூரியில் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர், இலங்கையின் பாது காப்புப் படையினருக்கு பயிற்சி கள் மற்றும் ஆயுத உதவி என்ற வகையில் பாகிஸ்தான் முன்னிலையில் செயற்பட்டதாக குறிப்பிட்டார்.

புலிகளுக்கு எதிரான யுத் தத்தில் இலங்கை வெற்றி பெற்றுள்ள போதும் முன்னாள் புலி உறுப்பினர்களை சமூ கத்தில் இணைப்பதிலும் வெற்றி பெறவேண்டும்.

பயங்கரவாதம் முரண்பாடு கள் காரணமாகவே உருவா கிறது. இலங்கையில் அது இனரீதியான முரண்பாடுகளால் தோற்றுவிக்கப்பட்டது. தென் னாசியாவை எடுத்துக்கொண் டால், பாகிஸ்தான் உட்பட்ட நாடுகளில் சமய ரீதியான முரண்பாடுகளே பிரச்சினை களுக்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

ஆயுதங்கள் விடயத்தில் பாகிஸ்தானைப் பொறுத்தவரை இந்தியா ஒரு பொருட்டல்ல என்றும் கயானி குறிப்பிட்டுள் ளார். இந்தியாவில் பாதுகாப்பு ஒதுக்கீடு பாகிஸ்தானை காட் டிலும் 10 மடங்கு அதிகமானது என்றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

# கடலோரநகரங்களை உள்நாட்டிற்குள் இடம் பெயர்த்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்யையின் கடலோரமாக அமைந்துள்ள அனைத்து பிரதான நகரங்களையும் உள்நாட்டினுள் மீள் நிர்மாணிக்க வீடமைப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் காலி,மாத்தறை,அம்பாந்தோட்டை உட்பட கடலோரமாக அமைந்திருக்கும் பிரதான நகரங்களும் எதிர்வரும் காலங்களில் கடற்கரையோரத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ள பிரதேசங்களில் மீள நிர்மாணிக்கப்படும்.

அதற்கென 20 வருட செயற்திட்டம் மற்றும் அதனுடன் இணைந்ததாக இலங்கையின் பௌதீக வரைபுத்திட்டம் என்பன உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சுனாமி மற்றும் கடல்கொந்தளிப்பு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து முக்கிய நகரங்களைப் பாதுகாப் பதும்,அவற்றின் மூலமான உயிர்ச்சேதத்தைக் கட்டுப்படுத்தவும் நோக்காகக் கொண்டே குறித்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

# நான்கு விக்கெட்டுக்களால் கொக்குவில் இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப்பிரிவின் "பிரிவு மூன்று" அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ கிரிக்கெட் போட்டி கடந்த 21, 22ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அட்றியன் 35, விதுசன் 32, பிரியதர்சன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கார்த்திக் மூன்று, சுஜிதரன், பங்குஜன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திவாகர் 33, ஆதித்தன் 20, உத்தமகுமரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிவதனன் ஆறு, டக்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

26 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜிந்தன் 24, எட்றியன் 20, சஞ்சயன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உத்தமகுமரன் ஆறு, சாம்பவன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 158 ஓட்டங்களைப் பெறறால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் பங்குஜன் 40, இராகுலன் 37, உத்தமகுமரன் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரியதர்சன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (எஸ்)

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் வர்த்தக சேவை அணிகள் வெற்றி



(கொழும்பு)

இலங்கை கூடைப் பந்தாட்ட சங்கம் ஒழுங்கு செய்த 48ஆவது வருட கூடைப் பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவிலும் பெண்கள் பிரிவிலும் வர்த்தக சேவைகள் சங்க அணிகளே வெற்றி பெற்றன.


கண்டி கிங்வூட் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற இப்போட்டியில் மகளிர் பிரிவில் இறுதிப் போட்யில் வர்த்தக சேவைகள் அணியும் இலங்கை கடற்படை அணியும் போட்டியிட்டன.

60-51 என்ற புள்ளி அடிப்படையில் வர்த்தக சங்க அணி வெற்றி பெற்றது. ஆண்கள் பிரிவில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் வர்த்தக சங்க அணியும் இலங்கை விமானப் படை அணியும் போட்டியிட்டன. கடும் போட்டிக்கு மத்தியில் 75-61 என்ற புள்ளி அடிப்படையில் வர்த்தக சேவைகள் அணி வெற்றி பெற்றது.

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவரும் மத்திய மாகாண சபை அங்கத்தவருமான சரத் ஏக்க நாயக்கா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நாடளாவிய ரீதியில் 32 அணிகள் பங்கு கொண்டன.




## அம்லா சாதனை



(போர்ட்எலிசபெத்)

குறைந்த போட்டிகளில் இரண்டாயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை தென்னாபிரிக்க வீரர் அம்லா புரிந்துள்ளார். இந்திய அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் 24 ஓட்டங்களைப் பெற்றபோதே இச்சாதனையை அம்லா புரிந்தார்.

இதன் மூலம் ஒரு நாள் போட்டி வரலாற்றில் 2 ஆயிரம் ஓட்டங்களை அதிவேகமாகப் பெற்ற வீரர் என்ற சிறப்பை 27 வயதான அம்லா பெற்றார். அவர் தனது 40ஆவது இன்னிங்சில் இந்த இலக்கை எட்டினார். இதற்கு முன்னர் பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஜாகீர் அப்பாஸ் தனது 45ஆவது இனிங்சில் 2 ஆயிரம் ஓட்டங்களை எட்டியதே சாதனையாக இருந்தது. அவரது 28 ஆண்டு கால சாதனையை அம்லா முறியடித்துள்ளார்.

## ஆன்ட்ரே அகாஸி தெரிவு

சர்வதேச டென்னிஸ் ஹோல் ஆப் ஃபேம் பட்டியலுக்கு பிரபல டென்னிஸ் வீரர் ஆன்ட்ரே அகாஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார். 8 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பட்டம் வென்றவரான அகாஸியின் பெயர் வரும் ஜூலை 9ஆம் திகதி நியூபோர்ட்டின் ரோட் தீவில் நடைபெறும் நிகழ்ச்சியின்போது ஹால் ஆப் ஃபேம் பட்டியலில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## டெஸ்ட் போட்டிகளிலிருந்து மலிங்க ஓய்வு பெறவுள்ளார்?



(கொழும்பு)

எதிர்வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து மலிங்க ஓய்வுபெறுவது குறித்து உறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லையென அவரது முகாமையாளரான சாலிய ஒஸ்ரின் தெரிவித்தார். மலிங்கவின் முழங்கால் தற்போது நல்ல நிலையிலுள்ளது. இந்தியாவுடன் நடந்த டெஸ்ட் தொடரின் பின் அவருக்கு இரண்டு மாதகால ஓய்வு தேவைப்பட்டது. எனினும் அவர் டெஸ்ட் தொடர்களில் விளையாடுவது குறித்தே சிந்தித்து வருகின்றார். எனினும் மலிங்க ஓய்வு பெறுவது குறித்து அவரது வைத்தியர், அணித் தலைவர் மற்றும் ரசிகர்களுடன் கலந்து பேச வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

## காலிறுதிக்கு முன்னேறியோர்




(சிட்னி)


கரோலின் வோஸ்னியாக்கி, நாலீ, ரோஜர் பெரடர் ஆகியோர் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி நேற்று காலை நடந்த நான்காவது சுற்று ஆட்டத்தில் லாத்வியாவை சேர்ந்த அனஸ்டசியா செவஸ் டோவாவை எதிர் கொண்டார். இதில் வோஸ்னியாக்கி 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு நான்காவது சுற்று ஆட்டத்தில் ஒன்பதாம் நிலை வீராங்கனையான நாலீ (சீனா) 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எட்டாம் நிலை வீராங்கனையான விக்டோரியாவை (பெலாரஸ்) தோற்கடித்தார். நாலீ காலிறுதியில் ஷரபோவா (ரஷ்யா) அல்லது ஆந்திரியாவை (ஜெர்மனி) சந்திக்கிறார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிஸ் சர்லாந்தின் ரோஜர் பெடரர் காலிறுதிக்குத் தகுதி பெற்றார். நேற்று நடைபெற்ற போட்டியில் அவர் இலகுவான வெற்றியைப் பெற்றதன் மூலமே காலிறுதிக்குத் தகுதியானார்.

# யூசுப் பதானின் அதிரடிச் சதம் வீண்; தொடரை வென்றது தென்னாபிரிக்கா




(செஞ்சூரியன்)

யூசுப் பதான் அதிரடிச் சதத்தைப் பெற்றபோதிலும், 33 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று, ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டி நேற்று செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 46 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களைப் பெற்றார். இது அம்லாவின் ஏழாவது சதம் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் வென்விக் 56, டுமினி 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முனாப் பட்டேல் மூன்று, சகிர்கான், யுவராஜ்சிங் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மழை காரணமாக போட்டி தடைப்பட்டமையால் 46 ஓவர்கள் கொண்டதாக இப்போட்டி அமைந்தது. அதன்படி டக்வெத் லூயின் முறைப்படி இந்திய அணிக்கு 268 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதற்கமைய களமிறங்கிய இந்திய அணி, மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது. எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த யூசுப் பதான், சகீர்கான் இணை மிகச் சிறப்பாக ஆடி 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் 40.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. யூசுப் பதான் எட்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 70 பந்துகளில் 105 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பார்த்தீப் பட்டேல் 38, சகிர்கான் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்க்கல் நான்கு, ஸ்ரெயின், ரொஸ்ரோஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அம்லாவும், தொடர் நாயகனாக மோர்கலும் தெரிவானார்கள். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றிக்கொண்டது.

# 4 விக்கெட்டுக்களால் ஆஸி வெற்றி



(சிட்னி)

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று பகலிரவு ஆட்டமாக சிட்னி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய இங்கிலாந்து அணி, 48 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ட்ரெட் ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் றைட் 32, மோர்கன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லீ மூன்று, டொகேற்றி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, 46 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது. இதில் டேவிட் ஹசி ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹடின் 54, ஸ்மித் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரெம்லொற்ட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பிரெட் லீ தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் அவுஸ்ரேலிய அணி 3-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. நான்காவது போட்டி 26ஆம் திகதி அடிலெய்ட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று கும்பாபிஷேகம் காணும் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில்



செந்நெல் விளைந்திடும், வளம் கொழிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில், கிளிநொச்சி நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயிலின் கும்பாபிஷேகம் இன்றாகும். கோயில் திருப்பணிகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில், அழகிய துவிதள விமானத்துடன் வர்ணம் தீட்டி, சிற்ப வேலைப்பாடுகளுடன் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வண்ணமயமாக மிளிர்கின்றது.

இரண்டு தடவைகள் போரினால் சேதமடைந்த இவ் ஆலயத்தின் திருப்பணிகள் கிளி.நகர வர்த்தகர்கள், கொழும்பு வாழ் கிளி.நகர வர்த்தகர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மற்றும் ஆலய நலன்விரும்பிகளின் நிதிப்பங்களிப்புடன் பூர்த்தியடைந்துள்ளன.

1936 ஆம் ஆண்டு கிளிநொச்சி கணேசபுர குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது. அவ்வேளையில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் கணேசபுரத்தில் அமைக்கப்பட இருந்தபோது காணி உத்தியோகத்தரான கிருஸ்ணபிள்ளை அவர்கள் கிளிநொச்சி நகரத்தில் இருந்த தனது காணியை கோயில் அமைப்பதற்கு வழங்கி உதவினார். மூத்த தமிழ் அரசியல் தலைவரான சு.நடேசபிள்ளை அவர்களின் அனுசரணையில் கிராம உத்தியோகத்தர் வெற்றிவேலு அவர்களின் மேற்பார்வையில், பொதுநிதிப் பங்களிப்புடன் இவ் ஆலயம் அமைக்கப்பட்டது.

ஆரம்ப காலத்திலிருந்து தர்மகர்த்தா வழிவந்த இவ் ஆலய நிர்வாகம் முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ம.சிறிகாந்தா, மேலதிக அரச அதிபர் பெருமயிலனார், திருநெறிக்கழக செயலாளர் த.நல்லதம்பி ஆகியோரின் பெருமுயற்சியினால் பொது நிர்வாகமாக மாற்றப்பட்டது. தற்போது 5ஆவது ஆலய பரிபாலன

**சி.கௌதமன்**

சபை ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் ஏனைய இந்து ஆலயங்களைப் போல அமைக்கப்படாது பிரசித்திபெற்ற தென்னிந்திய இந்து ஆலயங்களினைப் போல மேற்குத் திசையை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. ஏ-9 பிரதான வீதியினை நோக்கியவாறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமையானது, இவ் ஆலயத்திற்கு மேலும் எழிலூட்டுவதாக அமைந்துள்ளது.

கோயிலின் சிறப்பு அம்சமாக ஏனைய பரிவார மூர்த்திகள் கிழக்குத் திசையை நோக்கியவாறும், மூலமூர்த்தியான வேல் மேற்குத் திசையை நோக்கியவாறும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கையில் உள்ள பிரசித்தமான முருகன் ஆலயங்களான கதிர்காமம், செல்வச்சந்நிதி ஆலயங்களினைப்போல மூலமூர்த்தியாக வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

அலங்காரத் திருவிழாவாக முன்னர் நடைபெற்ற ஆலய உற்சவம் தற்போது ஆவணி மாதப் பௌர்ணமி நாளில் தீர்த்தோற்சவமும், 10 நாட்கள் திருவிழாவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான நடேஸ்வரர், பிள்ளையார், வைரவர், சண்டேஸ்வரர், சந்தான கோபாலர், நவக்கிரகங்களிற்கும் கும்பாபிஷேம் இன்று நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும், 45 நாள் சங்காபிஷேகமும், கும்பாபிஷேக நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளதுடன், மாலை வள்ளி, தேவசேனா சமேதர சுப்பிரமணியப் பெருமானுக்கு திருக்கல்யாண வைபோகமும், திருப்பொன்னூஞ்சலும் இடம்பெற்று எம் பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதி வலம் வரும் கண்கொள்ளாக் காட்சியினைப் பக்தர்கள் கண்டுகளிக்கலாம்.

# ஈரானின் அணுசக்தி குறித்த பேச்சு தோல்வியில் முடிவெனத் தெரிவிப்பு



ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் குறித்து அந்நாட்டுடன் நடத்திய பேச்சு வார்த்தை ஏமாற்றமளிப்பதாக சர்வதேச நாடுகளின் குழுவொன்று தெரிவித்துள்ளது.

ஈரானிய பிரதிநிதிகளுடன் துருக்கியில் இரு நாட்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தையில் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பிரிட்டனைச் சேர்ந்த, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி பரோனஸ் அஸ்டன் மேற்படி வெளிநாடுகளின் குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

இப்பேச்சுவார்த்தையில் ஈரான் முன்நிபந்தனைகளுடன் பங்குபற்றியதாக அவர் குற்றம் சுமத்தினார். அதேவேளை பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே இருப்பதாக அவர் கூறினார்.

அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஈரானிய அணுசக்தித் திட்டங்கள் குறித்த கரிசனைகளை எதிர்கொள்வதற்கான இராஜதந்திர வழிமுறைகள் நீடிப்பதாக அமெரிக்கா நம்புகிறது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை ஈரானிய பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் சயீட் ஜலீல் கருத்துத் தெரிவிக்கையில், ஈரான் முன்நிபந்தனைகள் எதுவும் விதிக்கவில்லை என்று கூறினார்.

ஆனால், எந்தவொரு தீர்வும் ஈரானிய அணுசக்தி தொழில்நுட்ப உரிமை உட்பட நாடுகளின் உரிமைகளை மதிப்பதாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

புதிய பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகள் குறிப்பிடப்படவில்லை எனவும் அடுத்த தெரிவு ஈரானின் கையிலேயே உள்ளது எனவும் பரோனஸ் அஸ்டன் கூறியுள்ளார்.

# கனடாவில் முஷரப்

கனடாவின் வன்கூவரில் விரிவுரைகளை நிகழ்த்துவதற்காக விஜயம் செய்துள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் தலைவர் பர்வேஸ் முஷாரப். தான் மீண்டும் பாகிஸ்தானில் பதவிக்கு வருவதற்கான ஆதரவினைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த விரிவுரை நிகழ்ச்சியில் முஷாரப்புக்குப் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மக்களின் மத்தியில் பேசிய அவர் மீண்டும் ஒரு தடவை ஒரு சிவிலியனாக பாகிஸ்தானை ஆட்சி செய்ய விரும்புவதாகக் கூறினார்.

"அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம்லீக்" என்ற பெயரில் தான் ஆரம்பித்துள்ள புதிய கட்சியின் கிளைகளை கனடாவின் வன்கூவர், ரொறன்ரோ, கல்காரி ஆகிய இடங்களில் நிறுவப் போவதாகவும் அறிவித்தார்.

பாகிஸ்தானில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதே தனது எண்ணம் என்றும் தற்போதைய தலைமைத்துவம் நேர்மையாகச் செயற்பட்டால் அது சாத்தியமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கனடாவில் கடும் பனிப்பொழிவு 40வாகனங்கள் விபத்தில் சிக்கின

(ரொறன்ரோ)

கனடாவின் தலைநகர் ரொறன்ரோவிற்கு வடமேற்குப் புறமான நகரொன்றின் பெருந்தெருவில் பனிப் பொழிவால் ஏற்பட்ட விபத்தொன்றால் 40 வாகனங்கள் பெருஞ்சேதமடைந்தன.

அதேவேளை விபத்தின் தாற்பரியத்தை பார்ப்பதற்கென வாகனத்திலிருந்து இறங்கிய பெண்ணொருவர் விபத்தில் கொல்லப்பட்டார்.

பெருந்தெரு 11இல் ஒரில்லா என்ற நகரிற்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 11 மணியவில் பனிப் பொழிவுடன் பனிக்கட்டித் தூறலும் இடம்பெற்ற போதே இவ் விபத்து இடம்பெற்றது. மேற்படி பெருந்தெருவின் தெற்குப்புற வழியில் ஏற்பட்ட இவ்விபத்தால் சுமார் 8 மணித்தியாலங்கள் அப்பெருந்தெருவில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

மேற்படி பனிப் பொழிவின்போது பார்வை நிலைத் தன்மை மிக வெகுவாகக் குறைவடைந்ததையடுத்து வீதியில் சென்ற மற்றைய வாகனங்களின் நிலையை அறியாமல் பின்தொடர்ந்த வாகனங்கள் விபத்திற்குள்ளாகின.



அதிலும் சிறு விபத்திற்குள்ளான ஒரு வாகனச் சாரதியான 22 வயது நிரம்பிய பெண்ணொருவர் இவ்வாகன விபத்தால் இடம்பெற்ற சேதங்களை அறியத் தனது வாகனத்தில் இருந்து இறங்கிய போது இன்னொரு வாகனத்தால் மோதுண்டு பரிதாபகரமாக மரணமானார்.

அதிக பனிப் பொழிவு மற்றும் பனிக்கட்டிப் பொழிவுச் சந்தர்ப்பங்களில் பார்வை தெரியாது மறைக்கும் வெள்ளைத்தன்மையே இவ் விபத்திற்கான காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

## பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டுமெனில்

# இஸ்லாமிய நாடுகளிலுள்ள படைகளை பிரான்ஸ் உடன் வெளியேற்ற வேண்டும்



தனது படைகளை இஸ்லாமிய நாடுகளிலிருந்து வெளியேற்றாவிடின், பணயக்கைதிகளை படுகொலை செய்ய நேரிடும் என அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன், பிரான்ஸிற்கு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அல்கொய்தாவிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஒலிநாடா ஒன்றை அல்ஜசீரா ஒலிபரப்பியுள்ளது.

ஒசாமா பின்லேடன் குரலில் பேசப்பட்டுள்ள அவ் ஒலி நாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நைகரில் வைத்து பணயக்கைதிகளாக பிடிபட்ட பிரான்ஸ் நாட்டு பிரஜைகளை விடுவிக்க வேண்டுமாயின், பிரெஞ்சுப் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேற வேண்டும். தமது யுத்தக் கொள்கையை பிரான்ஸ் அரசு மாற்றிக்கொள்ள வேண்டும். பிரான்ஸ் அதிபர் நிக்கோலாஸ் சார்கோஸி இதனை நிராகரிக்கலாம். ஆனால் அது, பணயக்கைதிகளைக் கொல்வதற்கு அவர் வழங்கும் பச்சை சமிக்ஞை ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பரில், அல்கொய்தாவின் வடஆபிரிக்க கிளைக்குழுவினரால், நைகரில் வைத்து 5 பிரெஞ்சு நாட்டவர்கள் உட்பட 7 வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டிருந்தனர். அல்கொய்தா இஸ்லாமிய மக்ஹ்ரெப் எனும் அமைப்பு இந்தக் கடத்தலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டது. கடந்த வாரம், இவர்களை மீட்பதற்கு நடந்த இராணுவ முயற்சி தோல்வியில் முடிந்ததுடன், இதனால் கோபமுற்ற அல்கொய்தா குழுவினர் இரு பிரெஞ்சு நாட்டவர்களைப் படுகொலை செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர் தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதியை சந்தித்து ஆலோசனை நடத்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு வெளியுறவுத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

முதல்வர் கருணாநிதியை அவரது கோபாலபுரம் இல்லத்தில், மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்றுச் சந்தித்துப் பேசினார். சுமார் அரை மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்பின்போது பல் வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது தி.மு.க நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு ஆகியோர் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி -

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு முதல்வர் கருணாநிதி ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார். இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் இலங்கை அரசோடு நல்ல நட்புறவு கொண்டுளளோம். நாம் அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வரும் வேளையில் இதுபோன்ற தாக்குதலில் ஈடுபடுவதை நாம் நியாயப்படுத்த முடியாது.

மனவர்கள் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தவிர, இம்மாதிரியான சுட்டுக் கொல்லும் சம்பவங்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது. இந்திய வெளியுறவுத் துறை மூலம் இலங்கை அரசுடன் பேசி இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாவண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் கருணாநிதியிடம் உறுதியளித்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

# அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு அசீமானந்தா சாமியார் கைது

(சென்னை)

அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு சம்பவத்தில் அபினவ் பாரத் என்ற இந்து அமைப்பைச் சேர்ந்த அசீமானந்தா குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருந்தார். அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தும்படி அஜ்மீர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி தேசிய உளவுத் துறையிடம் இருந்து அவரை ராஜஸ்தான் மாநில தீவிரவாத தடுப்பு படையினர் தங்களது பாதுகாப்பில் எடுத்து அஜ்மீர் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினார்கள்.

அவரை 2 நாள் காவலில் வைத்து விசாரித்து மீண்டும் நீதிமன்றில் ஆஜர் படுத்தும்படி மாஜிஸ்திரேட்டு உத்தரவிட்டார்.


இதைத்தொடர்ந்து தீவிரவாத தடுப்புப்படையினர் அவரைத் தங்கள் காவலில் விசாரணைக்குக் கொண்டு சென்றனர்.

இன்று மாலை மீண்டும் அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்படுகிறார்.

அசீமானந்தா ஏற்கனவே ஐதராபாத் மெக்கா மஜீத் குண்டு வெடிப்பில் கடந்த ஆண்டு சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்.

2008 ஆம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கிலும் அவர் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எந்த அமைப்பையும் அவமதிக்கவில்லை என்கிறார் மத்திய அமைச்சர் கபில்சிபல்



(சென்னை)

எந்த அமைப்பையும் அவமதிக்கவில்லை என்று மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் கபில் சிபல் கூறியுள்ளார். இதுதொடர்பாக மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் கபில கூறியதாவது -

இது தொடர்பாக மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை குறித்து யாரும் விமர்சிக்கக் கூடாது என்று உயர் நீதிமன்றம் கூறி இருப்பதை வரவேற்கிறேன். தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் ஏற்கனவே உயர் நீதிமன்றம் இந்தக் கருத்தை தெரிவித்து இருந்தது.

எந்த விசாரணை அமைப்பையும் நான் அவமதிக்கவில்லை. அத்துடன் நடந்து வரும் எந்த விசாரணையிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறுக்கிட முயற்சிக்கவில்லை.

என்றாலும் 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு தொடர்பான மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையை சுட்டிக் காட்டி பரப்பப்பட்டு வரும் பொய்யான தகவல்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் பதில் அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

மத்திய அமைச்சர் என்ற முறையில் மட்டும் அல்லாமல் இந்த நாட்டின் குடிமகன் என்ற வகையில் எனது பொறுப்புகளையும், கடமைகளையும் நான் முழுமையாக அறிந்து இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

# மீனவர் மீது தாக்குதல் நடைபெறாது கிழக்குப் பிராந்திய கடலோரத் தளபதி

(சென்னை)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து, முதல்வர் கருணாநிதியுடன் கிழக்கு பிராந்திய கடலோர பாதுகாப்புப் படைத் தளபதி எஸ்.பி சர்மா முக்கிய ஆலோசனை நடத்தினார்.


இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சர்மா,

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து முதல்வருடன் விவாதித்தேன்.

இந்த தாக்குதல் சம்பவங்களை நிறுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் கடலோர காவற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் மீது இனிமேல் எந்தவிதமான தாக்குதல் சம்பவங்களும் நடைபெறாது என முதல்வரிடம் உறுதியளித்துள்ளேன்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்சினை குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி கடலோரக் காவற்படையின் உயரதிகாரிகளும் மத்திய அரசு உயரதிகாரிகளும் ஆலோசனை நடத்தி உள்ளனர் என்றார்.

# திரைத்துறையினைச் சேர்ந்தவர்கள் ஆட்சிக்கு வர வாய்ப்பளிக்கக்கூடாது



(சென்னை)

தமிழகத்தில் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு சினிமா சம்பந்தப்பட்டவர் தான் முதல்வராகின்றனர்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடிகர்கள் நாடாள வேண்டும் என்று நினைக்கவில்லை.

விதி விலக்காக 10 ஆண்டுக்கு முன் வரை நடிகர் ராமராவ் முதல்வராக இருந்தார். இங்கு மட்டும் தான் இந்தக்கூத்து தொடர கிறது. எனவே திரைத்துறையினர் ஆட்சிக்கு வரக்கூடாதென பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

சினிமா நடிகர்கள் மாயையிலிருந்து இளைஞர்களை விடுவித்து, பா.ம.க.,வில் அவர்களை இணைக்க, கிராமங்கள் தோறும் பா.ம.க., கிளை அலுவலகங்கள் ஏற்படுத்தவேண்டும்.

தமிழகத்தில் 1967 வரை காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. 67 இற்குப் பிறகு திரைத் துறையிலிருந்து வந்த அண்ணா, கருணாநிதி, எம்.ஜி. ஆர்., ஜெயலலிதா ஆகியோர் ஆட்சி நடத்தினர்.

இப்போது திரைத் துறையில் உள்ள விஜயகாந்த் போன்றோர் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர். இதுபோன்ற செயலுக்கு இளைஞர்கள் வாய்ப்பளித்துவிடக் கூடாது.

இந்த நிலையை மாற்ற பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ஒவ்வொரு கிராமத்திலும் 5 பேர் கொண்ட குழுவை அமைக்க வேண்டும். கல்வி, விளையாட்டு, விவசாயம், நூலகம், மருத்துவத்துக்கு எனக் குழுக்களை அமைக்க வேண்டும்.

வளர்ந்து வரும் இளைஞர்களுக்கும், கிராம மக்களுக்கும் இந்தக் குழுவினர் வழிகாட்ட வேண்டும். இதுபோன்ற செயல்களை மேற்கொண்டால் இளைஞர்கள் அசைக்க முடியாத சக்தியாக இருப்பர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டமன்றத் தேர்தலுக்குப்பின் அ.தி.மு.க ஆட்சி அமையும்



(சென்னை)

தமிழகத்தில் மீண்டும் ஜெயலலிதா ஆட்சி அமை யும் என, நடிகர் ராதாரவி நம்பிக்கை தெரிவித்துள் ளார்.

காஞ்சிபுரம் அடுத்த சின்னையன் சத்திரத்தில் அ.தி.மு.க. சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு பேசிய நடி கர் ராதாரவி -

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கை நடத்தவே மிகவும் கஷ்டப் படுகின்றனர்.

தமிழகத்தில் கடுமையான மின் தட்டுப்பாடு உள்ளது. இலவசங்களை கொடுத்து தமிழக மக்களை ஏமாற்ற முடியாது. இன்னும் 3 மாதத்தில் தேர்தல் வரும்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்று ஜெயலலிதா தலைமையில் மீண்டும் ஆட்சி அமைவது உறுதி. வெற்றிக்கு நாம் அனைவரும் ஒன்றாகப் பாடுபடுவோம் என்றார்.




# நாடாளுமன்ற முடக்கம் தொடருமென அறிவிப்பு

(சென்னை)

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பாராளுமன்ற முடக்கம் தொடரும் என்று பா.ஜனதா தெரிவித்துள்ளது

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜனதா கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேக,

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பாராளுமன்ற கூட்டு குழு விசாரணை தேவை என்று காங்கிரஸ் தவிர அனைத்து எதிர்க்கட்சிகளும் வற்புறுத்தி வருகின்றன.

நாடாளுமன்றப் பொதுக் கணக்கு குழு முன்பு ஆஜராக தயாராக இருக்கும் பிரதமர், கூட்டு குழு முன்பு ஏன் ஆஜராகக்கூடாது?

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பாராளுமன்றத்தின் கடந்த குளிர்கால கூட்டத் தொடர் முழுமையாக முடக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளின் இநதக் கோரிக்கை நிறைவேறாவிட்டால், வருகிற பட்ஜெட் கூட்டத் தொடரிலும் நாடாளுமன்ற முடக்கம் தொடரும் என்று தெரிவித்தார்.

# தமிழ்ப்பாட பெறுபேற்றில் வீழ்ச்சி பொறுப்பை ஏற்பது யார்?

அண்மையில் வெளிவந்த க.பொ.த உயர்தரப் பிரிவில் தமிழ் ஒரு பாடமாக எடுத்தவர்களின் பெறுபேற்றில் உயர் பெறுபேறு(A) கிடைத்த வீதம் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. கலைப்பிரிவில் 3A எடுத்தவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் தமிழில் A தரச்சித்தியைப் பெறத் தவறியுள்ளனர். அநேக மாணவர்கள் C பெறுபேற்றைத் தான் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண சமூகத்தைப் பொறுத்தவரை இத்தகையதொரு நிலை விரும்பத்தக்க ஒன்றாக அமையவில்லை.

ஆறுமுகநாவலர் பிறந்த நாடு தமிழுக்கு உயர்வைத் தேடித் தந்த அறிஞர்கள் வாழ்ந்த நாடு என்று “மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்...” பேசிக்கொண்டிருக்கின்றோம். பாரதியார் கூறியதைப் போன்று இவ்வாறு பழங்கதைகள் பேசிக் கொண்டிருப்பதில் மகிமை இல்லை, ‘சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்திடுவோம்,

இன்றைய மாணவர்களின் போக்கினை நோக்குவது முதலில் இன்றியமையாதது. இன்றைய மாணவர்கள் எதையும் ஆர்வத்தோடு கற்பவர்களாக இல்லை. நுனிப்புல் மேய்பவர்களாகவே காணப்படுகின்றனர். சொன்னது சொல்லும் கிளிப்பிள்ளைகள் போல் கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்பிப்பவர்களாகவே விளங்குகின்றார்கள். அதற்கு ஏற்றாற்போலவே தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்களின் வழிப்படுத்தல்கள் காணப்படுகின்றன.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டியது அவசியம். பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்கள் எப்படித்தான் நன்றாகக் கற்பித்தாலும் முழுமையான பாடப்பதிப்புக்களைக் கற்பித்து வினா விடைகளை,செய்தாலும், தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியர் (எல்லாரும் அல்ல குறித்த சிலர்) குறிப்பிட்ட பகுதிக்குள் குறிப்பிட்ட வினாக்களை பரீட்சைக்கு முன்னதாக வழங்கி விடுகின்றார்கள். மாணவர்களும் அத்தகைய வினாக்களை மட்டுமே எதிர்பார்த்துக் கற்று விட்டு இலவுகாத்த கிளிபோல ஏமாற்ற மடைகின்றனர். மாணவர் மனப்போக்கு இந்த விடயத்தில் மாறவேண்டியது அவசியமாகியுள்ளது.

தமிழ்ப் பாடத்தைக் கற்கும் மாணவர் தொகை குறைந்து வருகின்ற நிலையில் அதன் போக்கை இன்னமும் அதிகரித்துச் செல்லும் வகையினதாகவே பெறுபேறுகள் அமைந்துள்ளன. தழிழைக் கற்றால் பெறுபேறு கிடைக்காது என்ற மனநிலை மாணவர் மத்தியில் உருவாவது இயல்பானது. இதன் தொடர்ச்சியாக பல்கலைக்கழகங்களிலும் தமிழை விசேடமாகப் பயில்பவர்கள் எண்ணிக்கையும் குறைந்து வருவதாக தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆறுமுகநாவலர் காலத்து நிலைமை யாழ்ப்பாணத்தில் உருவாகி வருகின்றது ஆங்கிலம் முதலிய பிறமொழிகளைக் கற்பதால் அதிகமான பலன்கள் கிடைக்கும் என்ற நிலை தோன்றி இருக்கின்றது.

தமிழைக் கற்கும் மாணவர்களின் நிலை தமிழை ஆர்வத்தோடு கற்கவில்லை, ஆழமாகக் கற்கவில்லை என்றால் அதற்கு அப்பால் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களது நிலையையும் குறிப்பிட்டே ஆகவேண்டும் தமிழ் கற்பித்தல் என்பதில் ஆர்வம் காட்டாமையும்,தமிழ் கற்பித்தலைக் குறைவாகக் கருதும் மனப்பாங்கும் சில ஆசிரியர்ககளிடம் காணப்படுகின்றது. மேலதிக ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளில் தமிழ் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாத நிலையில் எந்தவொரு ஆசிரியரையும் தமிழ் கற்பிக்க நிர்வாகம் வேண்டுகின்றது. அத்தகைய வேண்டுகோளின் அடிப்படையில் கற்பிக்கும் பாடமாகவும் தமிழ்மொழி அமைந்துவிட்டது.

தமிழ்மொழியை சிறப்புப்பாடமாகக் கற்ற ஆசிரியர் சிலர் உயர்தர வகுப்புக்களில் தமிழை ஒரு பாடமாகக் கற்பிக்க முன்வராமையும் அதற்குப் பின்னடிப்பதும் வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறான ஒரு நிலைதான் தமிழ் தெரியாத தமிழைச் சரிவரப் புரியாத ஒருவரால் தமிழ் கற்பிக்கப்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

தமிழ்மொழியின் ஆழத்தை அதன் இனிமையை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினாலே மாணவர் தமிழைத் தாமாக விரும்பிக்கற்றுக் கொள்வார்கள். இத்தகைய தேடலை உருவாக்குவதில் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பங்கு முதன்மையானது. அறிவுத் தேடல்களை விருத்தி செய்து மாணவர் கற்கும் தன்மைகள் அருகிக்கொண்டு செல்கின்றன. தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி “தேடிய கண்கள் தரிசனம்செய்யும்” பண்பை உருவாக்கியுள்ளன. இத்தகைய தரிசனங்களை மாணவர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலம் முதலிய பிறமொழிகள் தேவையானவை ஆயினும் தமிழ்மொழி, அதாவது தாய்மொழியை மிஞ்சியதாக அது அமைந்து விடக்கூடாது. பெற்ற தாயை அவமதித்து மாற்றாந் தாய்க்கு மதிப்பளிக்கும் பண்பாடு உருவாவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தாய்மொழியில் பல்வேறு பண்பாடுகள் நாகரிகங்களைக் கற்று உணரமுடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தமிழில் உயர்ந்த ஆசாரங்களையும் உயர்ந்த அறிவின்பங்கினையும் கண்டு கொள்ளலாம்.

‘அந்தமில் எம்மொழி மாதா - படும் அல்லலைத் தீர்க்கும்’ அறிவினை வளர்த்து தமிழ் மொழியின் சிறப்பினை உணருவோம்

தமிழ்மொழியைப் பெறு பேற்றுக்காக மட்டும் கற்றுவிடாது, தமிழ்மொழியின் பண்பாடுகளையும் வளர்ப்பதில் உறுதி பூண்டு கொள்ளுவோம். இத்தகைய நிலை உருவாக முதலில் மாணவர், ஆசிரியர் முதலியோர் இணைந்து செயற்படுவோம். அதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அனைவரும் எடுப்போம்.

-பூஞ்சிட்டு-

## கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வரவு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைத் துறைமுகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் உலகின் 31 முன்னணிக் கப்பல் நிறுவனங்கள் கொழும்புத் துறைமுகத்தில் சீரான சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

புலிகள் இராணுவரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை வரும் கப்பல்கள் தொகை அதிகரித்ததாகவும் கப்பல்களுக்கு அறவிடப்படும் காப்புறுதித்தொகை வெகுவாகக் குறைக்கப்பட்ட காரணத்தாலும் கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுவரும் துறைமுக நிர்மாணப்பணிகள் முடிவடைந்ததும் இலங்கை வரும் கப்பல்களின் எண்ணிக்கை மேலும் உயரும் எனவும் அவர் தெரிவித்தார்.

## தேசிய அடையாள அட்டையை நவீன முறையில் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தேசிய அடையாள அட்டையினை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் அதி உயர்தொழில்நுட்ப மையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,



அறிமுகப்படுத்தவுள்ள புதிய வகையிலான தேசிய அடையாள அட்டையின் தரவுகளை மாற்றவோ அல்லது திருத்தவோ முடியாது

இதன் மூலம் பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் ஆள்மாறாட்ட நடவடிக்கைகளைத் தடுக்க முடியும்

இதேவேளை திறந்து வைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் மையத்தினூடாக பொதுமக்கள் பல்வேறு தகவல்களைப் பெற முடியும். அத்துடன் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை குறுந்தகவல்கள் மற்றும் இணையத்தள வசதிகள் மூலமும் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### தென்மாகாணத்திலும் அமர்வு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள், மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வுகள் தென்மாகாணத்திலும் பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களைப்பதிவ செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி,காலி,மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே இந்த அமர்வு நடத்தப்படவுள்ளதாகவும் இதன்போது பொதுமக்கள் தமது காட்சியங்களை அளிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய கல்விக்கண்காட்சி 29,30 இல் கொழும்பில்

(கொழும்பு)

இந்தியாவின் பிரபல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் இணைந்து இலங்கையில் இந்தியக் கல்விக் கண்காட்சியை நடத்தத் தீர்மானித்துள்ளன.

இவ்வாறான கண்காட்சியினை இந்திய மண்ணிற்கு வெளியே நடத்தவில்லை என இந்திய கல்விமான்கள் தெரிவித்தனர்.


இந்தக் கண்காட்சி எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் பிரபல கல்வி மற்றும் ஊடக அமைப்புக்கள் இணைந்து இந்தக் கண்காட்சியைக் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுசெய்துள்ளன.

இந்தக் கண்காட்சியில் இந்தியாவின் 350 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுடன் மலேசியா,தாய்லாந்து,நேபாளம், பூட்டான் ஆகிநாடுகளின் நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன செஞ்சிலுவைச் சங்கம் நிதியுதவி

(கொழும்பு)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், சீன செஞ்சிலுவைச் சங்கம் 30 ஆயிரம் டொலர் நிதியுதவியை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தது.

சீனசெஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவிக்கான காசோலையை, இலங்கைக்கான சீனத்தூதுவர் யாங்ஸியூபிங் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையதிகாரி கேணல் சுதத் மடு கல்லவிடம் கையளித்தார்.

சீனசெஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட இந்த நிதியுதவி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை ஓரளவு தீர்த்து வைக்குமென சீன அரசாங்கம் தெரிவித்தது.

சீன செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை வரவேற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சுனாமி அனர்த்தத்தின்போது உதவி வழங்கப்பட்டதையும் நினைவு கூர்ந்தது.

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# யாழில் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்த புதிய புலனாய்வுக் கட்டமைப்பு உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிய புலனாய்வுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இக் கட்டமைப்பு பொலிஸாருடன் இணைந்த வகையில் அது தனது பணிகளை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று தொடக்கம் புலனாய்வு அதிகாரிகளை நியமித்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமையவே இந்தப் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழப்பாண பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறை மற்றும் பலாலி பொலிஸ் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கே புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலை, கொள்ளை உட்பட்ட முறைகேடுகளை மேற்கொள்ளும் நபர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், குறித்த குற்றச் செயல்கள் பயங்கரவாதம் சார்ந்தது இல்லை என அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, குற்ற விசாரணை திணைக்களத்தின் உதவி பொலிஸ் அதிகாரியொருவரின் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவொன்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தமது விசாரணைகளை மேற்கொள்ளவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சில தமிழ் தரப்பினர் அரசியல் ரீதியாக பாதுகாப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தாம் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவித்து போலியான முறைப்பாடுகளை முன்வைக்க முயற்சிப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## பாடசாலை பஸ் சேவையில் நெரிசலைத் தடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை முச்சக்கர வாகனங்களிலும் ஏற்றிச்செல்வதும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் அளவுக்கதிகமாக மாணவர்களை ஏற்றிச் செல்வதும் எதிர்காலத்தில் தடை செய்யப்படும் என தேசிய போக்குவரத்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி திருமதி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மாலை 2.30 மணிக்கு அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கட்டாயக் கல்விக்குழு, விளையாட்டுக்குழு என்பனவும் தெரிவுசெய்யப்படவுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

# புரிந்தவனுக்குத்தான் புரியும் இசைஞானம் பற்றியும் தெரியும்

### தேசிய பொங்கல் இசை நிகழ்ச்சி பற்றிய மனக்குமுறல்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேசியப் பொங்கல் விழாவின்போது நடைபெற்ற இசை நிகழ்ச்சி தொடர்பாக யாழ். ஊடகங்கள் சில உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளன. இதனால் இசைக்கலைஞர்கள் ஆறாத மன உளைச்சலைச் சுமக்க நேரிட்டுள்ளது.

இந்த இசைநிகழ்வின் முக்கிய பாத்திரமான யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீதர்ஷனன் மேற்படி ஊடகக் கண்ணோட்டம் குறித்து மனம் வெதும்புகிறார். உண்மையில் நடந்தது என்ன என்பது குறித்து தனது உள்ளக் கிடக்கையை மனந்திறந்து பின் வருமாறு விபரிக்கிறார்.

பத்திரிகையில் வெளிவந்திருந்த தரவுகள் பற்றிய சரியான விளக்கங்கள் மக்களைச் சென்றடையவேண்டும் என ஆசைப்படுகிறேன். வேறொருவரின் ஒலிப் பதிவுக்கு மேடையிலிருந்து என்னால் வாயசைப்புச் செய்யப்படவில்லை. அந்த ஒலிப்பதிவிலும் ஒலித்தது என்னுடைய குரலே யாகும். அதே நிகழ்வில் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக நடனத்துறையினரின் நடனத்துக்கும் நானே பின்னணிப் பாடகராக செயற்பட்டிருக்கிறேன். அது ஒலிப் பதிவு மூலம் செய்யப்பட்ட நடனமல்ல.

இவ்விரு நிகழ்வுகளிலும் ஒலித்த குரல்களை ஒப்பிட்டுப் பார்த்ததில் இசை கற்காதவர்களுக்குக்கூட அவையிரண்டும் ஒரே குரலில் பாடப்பட்டவை என்பது தெளிவாகத் தெரிந்திருக்கும்.

இந்தியாவின் முன்னணி இசையமைப்பாளர்கள் கூட இந்த யுக்தியைக் கையாள்வது வழக்கம். நிகழ்வு திறந்த வெளியரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் மழை வருமோ என்கின்ற நிலைமை காணப்பட்டதாலும் ஒலிப்பதிவுகள் கூலம் நிகழ்ச்சி ஒழுங்கானது முதலே தயாரிக்கப்பட்டிருந்தது.

திறந்த வெளியில் நாலு புறங்களிலுமிருந்து அடிக்கும் காற்றானது ஒலிவாங்கயினுள் புந்து இசையின் இனிமையைக் குறைத்துவிடுமாகையால், அப் அப்படியானதொரு சந்தர்ப்பத்தில் இப்படியானதொரு தொழிலநுட்ப யுக்தியைக் கையாள்வது தவறாகத் தெரியவில்லை.

பாடலுக்குரிய மிருதங்கத்தை ஒலிப்பதிவு செய்வதற்காக முதல் நாளிரவு நாம் தயாராக இருந்தும்கூட மிருதங்க இசைப்பாளர் பலாலியில் இசை நிகழ்வுக்கு சென்றுவிட்டு வர நள்ளிரவாகிவிட்டதால் அது முடியாமல் போனது.

ஆனாலும் நடனத்துக்கு மிருதங்க இசை முக்கியமானதாகையால் மேடையில் மிருதங்க ஜதியைக் கூட்டியே மாணவிகள் நடமாடினார்கள். ஆனால் மெல்லிசையாக அமைக்கப்பட்டிருந்த பாடலுக்கு தபேலா இசை போதுமாகையால் பாடல், தபேலா இசையுடன் வெளிவந்தது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களும் இத்தொழில்நுட்ப யுக்தியை வெகுவாகப் பாராட்டினார்கள்.

## குச்சவெளியில் நில...

கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், சம்பவத்தினை காணச் செல்லும் மக்கள் கூட்டம் அதிகரித்து வருவதனால் குறித்த பிரதேசத்திற்குள் பொதுமக்கள் பிரவேசிக்காதவாறு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் திருகோணமலைக்குப் பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தினால் பிரதேச மக்கள் ஒருசிலர் நகரப் பகுதிகளில் உள்ள தங்கள் உறவினர்களது வீடுகளில் தஞ்சம். புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## விரைவில் வெளிவரவிருக்கும்....

இணையம் விரைவில் இந்தத் தகவல்களை வெளியிட உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்களின் இரகசிய கணக்கு விபரங்கள் இவ்வாறு அம்பலப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த கணக்கு விபரங்களில் இலங்கையின் முன்னணி அரசியல்வாதிகள் சிலரின் கணக்கு விபரங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்தப் பட்டியலில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளா அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளாக அங்கம் வகிக்கின்றனர் என்பது குறித்து அறவிக்கப்படவில்லை.

இந்தத் தகவல்களினால் சில அரசியல்வாதிகள் அதிர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுவிட்சர்லாந்து தனியார் வங்கியொன்றின் உயர் அதிகாரி ராடொல்ப் எல்மர் என்பவரினால் இந்தத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளதாகவும், தரவுகள் விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜுலியன் அஸான்சேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி மகிந்தவுக்கு...

பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களான மூன்று மனுதாரர்கள் இவ் வழக்கை பதிவு செய்ய உள்ளதாக இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின் அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கை வெற்றியடையச் செய்வதற்காக உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் அமெரிக்காவின் நீதித் திணைக்களத்துக்கு இனப்படுகொலை புரிந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கைது செய்யும்படி அழுத்தங்களை ஏற்படுத்துமாறு இவ்வமைப்பு கோரியுள்ளது.

Genocide Act (18 USC 1091, Warcrimes Act (18 USC2441) மற்றும் Torture Act (18 USC 2340A) ஆகியவற்றின் கீழ் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைதுசெய்யக் கோரி மனுக்களை அனுப்பியும், தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டும் செயல்படுமாறு இவ்வமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க நீதித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கமான 202 514 2000 எனும் இலக்கத்திலோ அல்லது askdoj@usdoj.gov எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கைது செய்யும்படி அழுத்தங்களை ஏற்படுத்துமாறு இவ்வமைப்பு கோரியுள்ளது.

அத்துடன், போர்க்குற்றம் தொடர்பான திணைக்களத்தின் 202 647 5072 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான அதிகாரி ஸ்டீபன் ரப்பிடம் முறையிடுமாறும் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

10 நாட்கள் அமெரிக்காவில் தங்கவுள்ள மகிந்த ராஜபக்ஷவை கைது செய்யக் கோரி உலகெங்கும் உள்ள தமிழர்கள் அமெரிக்க தூதுவராலயம் முன் வெகுஜன நடவடிக்கைகளை எடுக்குமாறும் இவ்வறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அமெரிக்க வாழ் தமிழர்கள் இத்தகைய வெகுஜன நடவடிக்கை ஒன்றை இன்று ஏற்பாடு செய்துள்ளதாகவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றிலைச் சின்னத்திலேயே...

மாபெரும் சொத்தாகும்.

உரிமைகளைப் பெற்றுத்தருவோம் என்று வெறுமனே வீரம் பேசிய வாய் வீச்சுக்களின் விளைவுகள் யாவும் எமது மக்களின் மீது அழிவுகளையும், அவலங்களையுமே சுமத்தி விட்டுச் சென்றிருக்கின்றன.

உரிமைகளை அடைவதற்கு கடந்த காலங்களில் கனிந்து வந்த சந்தர்ப்பங்கள் யாவும் சுயலாப சக அரசியல் தலைமைகளால் தவறவிடப்பட்டிருக்கும் நிலையில்...

இதனால் எமது மக்கள் பேரழிவுகளையும், பெருந்துயரங்களையும் சந்தித்து, பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கும் ஒரு சூழலில்...

எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு நடைமுறைச் சாத்தியமான வழிமுறையான இணக்க அரசியல் மூலம் நாம் இழந்தவைகள் அனைத்தையும் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு நாம் அயராது உழைத்து வருகின்றோம்.

யாருடன் பேசி எமது மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியுமோ, அவர்களுடன் உறவுக்கு கரம் கொடுத்தே எமது மக்களின் உரிமை முதற்கொண்டு அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து நாம் உழைத்து வருகின்றோம்.


அரசாங்கத்திற்கும் எமது மக்களுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை நாமே உருவாக்கியிருக்கின்றோம். இதை உடைத்துப்போட எமக்கு சம்மதமில்லை. இருக்கின்ற வழிமுறையை உடைத்து எமது மக்களுக்கு துரோகமிழைக்கவும் நாம் விரும்பவில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எமது வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தி செய்வதற்காகவே நடத்தப்படுகின்றது. அரசாங்கத்துடன் இணைந்தே அபிவிருத்தி பணிகளில் ஈடுபட முடியும். அரசாங்கமே அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் வழங்க முடியும்.

ஆகவே, எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து வரும் நாம், எமது வரலாற்று வாழ்விடங்களின் அபிவிருத்தி பணிகளிலும் ஈடுபடுவதற்காக ஆளும் அரசாங்கத்தின் பிரதான கட்சியும் பங்கெடுக்கும் பொதுச் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது எனத் தீர்மானித்திருக்கின்றோம்.

அரசாங்கத்துடனான எதிர்ப்பை காட்டுவோம் என்று சுயலாப தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுக்கும் உதவாத எதிர்ப்பு அரசியல் வாக்குறுதிகளை வழங்குவது போல் அன்றி அரசாங்கத்துடனான இணக்கப்பாட்டை மேலும் வளர்த்து, எமது வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் நாம் பொதுச் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றோம்.

அபிவிருத்தி முதற்கொண்டு அரசியலுரிமை மற்றும் தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமை பிரச்சினை வரையில் அரசாங்கத்துடன் பேசித்தீர்க்கும் இணக்க அரசியல் ஊடாகவே எதனையும் சாதிக்க முடியும். நாம் அதற்காகவே பொதுச் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தை தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.



# வாழ்க்கைச் செலவு உயர்வு வேதன உயர்வும் வேண்டும்

## அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் லால்காந்த



(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் சதவீதத்திற்கு சமாந்தரமாக வேதனங்கள் உயர வேண்டும் என அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இந்த வலியுறுத்தலை அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கே.டி. லால் காந்த விடுத்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி குருகெதர கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை வங்கி சேவையாளர் சங்க 6 ஆவது வருடாந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மலிவு விற்பனைகளின் போது பழைய விலையை புள்ளடியிட்டு மறைத்து புதிய விலைகளை காட்சிப்படுத்துவது போன்று வேதன உயர்வை வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, 9 ஆயிரத்திற்கு வேதனவுயர்வை வழங்குமாறு கோரியபோது 8 ஆயிரமாக இருந்த வேதனங்களைப் புள்ளடியிட்டு மறைத்து புதிய வேதனம் என அரசாங்கம் குறிப்பிட்டதாக கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

எனினும், புதிய வேதன முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்த அவர், வாழ்க்கைச் செலவுக் கேற்ற சமாந்தரமான வேதன உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற சூத்திரம் உருவாக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், அரசாங்கம் நாட்டு மக்களுக்காக உரிய பலனுள்ள அரசியலை மேற்கொண்டு வருவதாக நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் நான்கு பேர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

ஊடகவியலாளர் இருவரை அச்சுறுத்திய பிரதியமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு அதிகாரி உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அநுராதபுரம், நுவரவெள என்ற இடத்தில் வைத்து குறிப்பிட்ட இரு ஊடகவியலாளர்களையும் பிரதியமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு அதிகாரியும் மேலும் மூவரும் அச்சுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் அநுராதபுரம் பொலிஸில் செய்த முறைப்பாடு செய்துள்ளனர். உடனடியாகச் செயலில் இறங்கிய பொலிஸார் நால்வரையும் கைது செய்தனர்.

இதேவேளை, லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரதீப் காணாமல் போய் இன்றுடன் ஒரு வருடமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் இராட்சத டொல்பின்



(கொழும்பு)

மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசத்தின் மாங்கேணிக் கடற்கரையில் நேற்றுக்காலை இராட்சத டொல்பின் மீனொன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கடலில் பாரிய மீனொன்று நீந்தி வருவதைக் கண்ட மீனவர்கள் அதனைப் பிடித்துக் கட்டி கரைக்கு இழுத்து வந்துள்ளனர். காயம் காரணமாக நீந்த முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த டொல்பின் மீனொன்றே அவ்வாறு கரைக்கு இழுத்து வரப்பட்டிருப்பது பின்னர் தெரிய வந்தது. நேற்று முன்தினம் மாலை வரை அம்மீன் உயிருடன் இருந்துள்ளது.

கட்டி இழுத்து வரப்பட்ட மீன் 14 அடி நீளமும், 3 அடி சுற்றளவையும் கொண்டுள்ளது. நேற்று காலை அது இறந்துள்ளது. இதற்கு முன்னரும் இப்பகுதியில் டொல்பின் மீனொன்று கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கரையொதுங்கியுள்ள டொல்பின் மீன் கொழும்பில் அமைந்துள்ள நீரியல் வள ஆராய்ச்சி மையத்துக்கு (நாரா) எடுத்துச் செல்லப்படவுள்ளது.

# டெங்கு நோய்த் தாக்கம் இதுவரை 246 பேர் மரணம்

(கொழும்பு)

டெங்கு நோய் காரணமாக இதுவரை 246 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோய் தொற்று காரணமாக நாடளாவிய ரீதியாக 34 ஆயிரத்து 105 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், கொழும்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 942 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 957 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் மூவாயிரத்து 7 பேரும் டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இந்திய மீனவர்களுக்கு...

முகர்ஜி, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததாக கூறியுள்ளார். மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இலங்கை அரசாங்கத்தோடு இந்தியா நல்ல நட்புறவைக் கொண்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கு தேவையான பல்வேறு உதவிகளை இந்தியா செய்து வரும் நிலையில், இலங்கை கடற்படையினரின் இத்தகைய தாக்குதல் சம்பவங்களை நியாயப்படுத்த முடியாது.

இந்திய மீனவர்கள் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமே ஒழிய, இத்தகைய துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு சுட்டுக்கொல்லும் சம்பவங்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபடக்கூடாது.

இந்திய வெளிவிவகார அமைச்சு ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் பேசி இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் உறுதியளித்துள்ளேன் என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் மற்றுமொரு மீனவரான ஜெயகுமார் கொல்லப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியாவில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த மீனவரான 28 வயதுடைய ஜெயக்குமார் வேறு சிலருடன் இணைந்து நேற்றிரவு கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் அவர்களை இடைமறித்துத் தாக்கியதில் ஜெயக்குமார் இறந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் குறித்து கேள்விப்பட்ட தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்றுத் தன்னைச் சந்தித்த மத்திய நிதித்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் இச்சம்பவம் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டதுடன், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நிகழாத வண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இத்தாக்குதலில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசு இலங்கை அரசாங்கத்தினை வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் ஜெயக்குமார் குடும்பத்திற்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதுடன், அவரது குடும்பத்தாருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க நேற்று உத்தரவிட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் ஜெயக்குமார் கொல்லப்பட்டதைக் கண்டித்து புஷ்பவனம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், தமிழக மீனவர்களுக்கு மத்திய மாநில அரசுகள் தகுந்த பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அவுஸ்ரேலியாவுக்கான...

அரசியல் தஞ்சம்கோரி நாட்டைவிட்டு விட்டு வெளியேறுவோர் மற்றும் குடிவரவு கட்டுப்பாடுகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை தடம்மாறச் செய்யும் அச்சுறுத்தலையும் இவ்விவகாரம் ஏற்படுத்தியுள்ளது.

சிவில் யுத்தம் முடிவுற்றபின் 2009 ஜுலை மாதம் இலங்கைக் கடற்படைத் தளபதியாக பதவியேற்ற திஸேர சமரசிங்கவுக்கு எதிராக குறிப்பான போர்க் குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை.

# காணாமல் போன இழுவைப் படகு இந்தோனேசியாக் கடலில் மீட்பு!



(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் ஆழ்கடலில் காணமல் போயிருந்த சங்கர புத்தா 2 என்ற கப்பல் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியக் கடல்களுக்கு அப்பால் சிக்குரா தீவுகளுக்கு அண்மையில் வைத்து இந்தப் பாரிய இழுவைப் படகு இந்தியக் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக இலங்கை கடற்படைப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித்துள்ளார்.

முன்னர் காணமல் போயிருந்த இந்தக் கப்பலைத் தேடும் நடவடிக்கைகளில் இலங்கை கடற்படையினர் இந்தோனேசிய கடற்படையினருடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் 12ஆம் திகதி காலி துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பலில் பயணித்த 5 மீனவர்களும் சிறந்த தேக நலத்துடன் இருப்பதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி திணைக்களமும் இலங்கைக் கடற்படையினரும் இணைந்து தற்சமயம் மீனவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் சிலர் அடிப்படை வசதி கோரி சிறைச்சாலை கூரையின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள் ளனர்.

இது தொடர்பாக அங்குள்ள பெயர் வெளியிட விரும்பாத கைதி ஒருவர் நேற்று மாலை தமிழோசையிடம் கூறும் போது, குடிநீர்ப் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை, இடப்பற்றாக்குறை மற்றும் சந்திக்க வருபவர்களிடம் சிறைப் பணியாளர்கள் தகாத முறையில் பேசுவதை நிறுத்துவது போன்வற்றைச் சீர்செய்ய வலியுறுத்தி கைதிகள் கூரை மேல் நின்று ஆர்ப்பாட்டம் நடத்துவதாக கூறினார்.

அத்துடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என அனைத்து இனக் கைதிக ளும் ஒன்றிணைந்து ஈடுப்பட்டு வருவதாகவும் கூறினார்.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/272)
தொலைபேசி: 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.